


மலர் 02 இதழ் 02 பெப்ரவரி 2012

# சமகாலம்*

(சமூக பொருளாதார விஞ்ஞான ஆன்மீக கலை இதழ்)

# SAMAKAALAM

(Socio Economic, Scientific, Spiritual & Arts Magazine)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகல செல்வங்களையும் அள்ளி வழங்கும்

# இலண்டன் ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயம்

# LONDON SRI SELVA VINAYAGAR TEMPLE







**அழகிய திருமண மண்டபம் மணவறையுடன் கூடிய**
**சகல வசதிகளும் கொண்ட அடக்கமான திருமண மண்டபம்**
**முழுமையான திருமண package வசதிகளும் உண்டு**

தாயகத்தில் ஆயிரம் சிறார்களைப் பராமரிக்கும்
எமது உன்னத கைங்கரியத்திற்கு கரம் கொடுக்குமாறு
உங்களை அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

மேலதிக விபரங்களுக்கு

**020 8911 8934**

Opening Hours : 8.00am - 2.00pm | 5.00pm - 9.30 pm

**299 - 303 Ley Street, Ilford, Essex IG1 4BN**


W : www.sriselvavinayagar.org.uk | E: info@sriselvavinayagar.org.uk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘செருக்குற்றுச் செருச்செய்து செகத்தினை அழிக்காதீர்’

## மகா சிவராத்திரி தரும் செய்தி



கந்தபுராணத்தின் தோற்றம் தமிழர்களிடை சிவராத்திரியை பெருவிழாவாக்கியது பரவலாக்கியது எனலாம். அந்த வகையில் யாழ்ப்பாணக் கலாச்சாரம் கந்தபராணக்கலாச்சாரம் என்ற பண்டிதமணி கணபதிப்பிள்ளை ஐயா அவர்களின் கூற்றுக்கமைய தாயகத்தின் பெரு விழாவாகச் சிவராத்திரி இன்றுவரை தொடர்கிறது. இத்தினம் குறித்த கந்தபுராணத்து தட்சகாண்டத்து அடிமுடி தேடிய படலத்தில் வரும் வரலாறு, பிரமதேவன் தன் மகனான தக்கனுக்கு சிவபெருமானின் பரதத்துவத்தை விளக்கக் கூறப்படும் கதையாக அமைந்துள்ளது. அதே வேளை இந்தக் கதையின் சமுகநோக்கை எடுத்து நோக்குவோமானால் ‘‘செருக்குற்றுச் செருச்செய்து செகத்தினை அழிக்காதீர்’’ என்கிற ஆண்டவன் விருப்பை இக்கதை வெளிப்படுத்துவதாகவும் அமைகிறது.

பிரமனுக்கும் திருமாலுக்கும் யார் பெரியவர் என்ற அகங்காரம் தலைதூக்கியது. நானே அனைத்தையும் படைப்பவன் ஆதலால் நானே பெரியவன் என்பது பிரமனின் வாதம். நானே பிரமன் உட்பட அனைத்தையும் காப்பவன் ஆதலால் நானே பெரியவன் என்பது திருமாலின் வாதம். வார்த்தைகள் தடித்து அடுபோருக்கு ஆயத்தமாயினர் இருமூர்த்திகளும். இதன் விளைவாக உயிர்களும் உலகுகளும் வீணே ஆயுதஅழிவுக்குள்ளாகப் போகிறார்கள் என்று கருணை கூர்ந்த சிவபெருமான் இருவரிடையிலும் நீள்ஒளிப்பிழம்பாகத் தோன்றினார்

நின்மலை தனக்கு மூத்த
நீலமாமலைக்கும் வேதம்
பொன்மலை தனக்கும் **நாப்பட்**
**புரைதவிர் பதுமராக**
மன்மலை நின்றதென்ன
மாறுகொண்டவர் தம்மிற்றாம்
தொன்மலைவுறாத வண்ணம்
தோன்றிய சுடரைக்கண்டார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என நீள்ஒளியாக நின்ற சிவன் அருட்கோலத்தைச் சிவபுராணம் விளக்குகிறது. இதன்வழி சிவன் நீள்ஒளியாக நின்றமை உயிர்களையும் உலகையும் நிலைநிறுத்தும் கருணைச்செயல் என்று தெளிவாக்கப்படுகிறது.

ஆனாலும் செருக்குற்றார் நெஞ்சத்தில் அருட்கோலம் உடன் மாற்றம் எதையும் செய்யவில்லை. இதனால் எனது அடிமுடி காண்பவர் எவரோ அவரே பெரியர் எனச் சிவப்பரம்பொருள் உரைத்து நின்றது. உடனே தனது அன்னவாகனத்தில் (ஹம்ச) பிரமன் ஆகாயம் நோக்கி முடி தேடி எழுந்தான். சரஸ்வதியைச் சக்தியாகக் கொண்ட பிரமனுக்கு அறிவால் ஆண்டவனின் எல்லையினைக் காணலாமென்ற எண்ணம். திருமாலோ வராகவடிவெடுத்து சிவபெருமானின் திருவடியைக் கண்டிடப் புவியின் கீழ் நோக்கிச் சென்றார். கரவலிமை கொண்டு காத்திடும் திருமாலுக்கு கடும் முயற்சியால் கடவுளின் எல்லையைக் கண்டிடலாம் என்னும் எண்ணம். இருவரது முயற்சியும் பயன் அளியாத நிலையில் ஆணவம் அடங்கி சிவபெருமானினைப் பணிந்து வணங்கி தம் பிழைபொறுத்திட வேண்டினர்.

அரியும் யானுமுன் தேடுமவ்<br>
வனற்கிரி அனல<br>
கிரியெனும் படி நின்றதால்<br>
அவ்ஒளி சிறந்த<br>
இரவதே சிவராத்திரி<br>
யாகின திறைவன்<br>
பரவியுய்ந்தனர் அன்னதோர்<br>
வைகலிற் பலரும்.

எனப் பிரமன் தன் மகன் தக்கனுக்கு சிவபெருமானின் முழுமுதற்கடவுள் நிலையை எடுத்துரைத்ததாகக் கந்தபுராணத்தில் கச்சியப்பசிவாச்சாரியர் விளக்குகின்றார்




சேக்கிழார் பெருமான் நீள்ஒளியாக நின்ற இறைப்பேரொளியைத் தமிழ்ப்பிழம்பொளி எனப்பாடி தமிழர்களின் விழாவாகச் சிவராத்திரி விழாவை உலகிற்கு எடுத்துரைக்கின்றார்.

'காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய்<br>
நீணாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாஞ் சிவலிங்கம்<br>
நாணாது நேடியமால் நான்முகனுஞ் காணநடுச்<br>
சேணாரும் தமிழ்ப்பிழம்பாய்த் தோன்றியது தெளிந்தாராய்''


திருஞானசம்பந்த சுவாமிகள் மயிலாப்பூரில் பூவைப்பாட்டு மூலம் அக்காலத் தமிழகத்தில் ஒவ்வொரு மாதத்திலுதம் கொண்டாடப்பட்ட முக்கிய பெருவிழாக்களைப் பாடினார். அதில் மாசிமாதத்து விழாவாக கபாலீச்சுரர் கடலாடல் விழாவையே பாடிச்சென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மடலார்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்
கடலாட்டுக் கண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்
அடலானேறு ஊரும் அடிகள் அடிபரவி
நடமாடல் காணாதே போதியோ பூம்பாவாய்"

என்பது அந்தச் சீகாமரம் பண்ணில் அமைந்த திருமயிலைத் திருப்பதிகம். பக்திஇலக்கிய காலத்தில் அடிமுடி தேடிய கதை பரவலாகப் பக்தி இலக்கியங்களில் பாடப்பட்டாலும் சிவராத்திரி மாசிமாதத்திற்கு உரிய சிறப்புப் பெருவிழாவாக அமையவில்லை என்பதை இது எடுத்துக் காட்டுகிறது. ஆனால் மாணிக்கவாசகப் பெருமானின் திருவாசகம் தந்த திருப்புமுனையாகச் சிவவழிபாடு தமிழகத்தில் வேகம் கொண்டெழுந்தமையும் கூடவே 2ம்பாண்டியப் பேரரசின் வீழ்ச்சி இறைவனே தமிழையும் சைவத்தையும் காக்க வேண்டுமென்ற வரலாற்று மாற்றத்தை ஏற்படுத்தியமையும் சிவனுக்குரிய விழாக்கள் முதன்மை பெற்று முன்னர் கொண்டாடப்பெற்ற விழாக்கள் பின்தள்ளப்பட்டு மாறுதல்கள் ஏற்பட்டன.



...ஞ்சை பெரிய கோவிலில் மகா சிவராத்திரியை முன்னிட்டு குட...
...டமாக பெருவுடையார் திருமேனியில் பால் அபிஷேகம் நடக்க...

## சிவவிரதங்களுள் முக்கிய விரதமாக மகாசிவராத்திரி

சிவவிரதங்கள் ஒன்பது. சோமவார விரதம், திருவாதிரை விரதம்,கேதாரவிரதம்,உமாமகேசுவர விரதம், சிவராத்திரி விரதம்,கலியாணசுந்தர விரதம்,சூலவிரதம், இடபவிரதம், ,பிரதோஷ விரதம்.

இதில் சிவராத்திரி விரதம் நித்திய சிவராத்திரி, பட்ச சிவராத்திரி,மாதசிவராத்திரி,யோக சிவராத்திரி மகாசிவராத்திரி என ஐந்து உள. ஒரு வருடத்தில் வரும் 24 சதுர்த்தசிகளிலும் சிவபூசை செய்தல் நித்திய சிவராத்திரி. தைமாதம் கிருஷ்ணபட்ச பிரதமை முதல் 13நாள் சிவபூசை செய்தல் பட்ச சிவராத்திரி. மாசி கிருஷ்ணபட்ச சதுர்த்தசி, பங்குனி முதல் திருதியை, சித்திரை கிருஷ்ண அட்டகம், முதலியன மாதசிவராத்திரிகள், திங்கட்கிழமை முழுவதும் அமாவாசையாக வந்தால் யோக சிவராத்திரி.

மாசிமாத கிருஷ்ண பட்ச மாதசிவராத்திரியில் நள்ளிரவில் இலிங்க உற்பத்தி நிகழ்ந்ததால் இச்சிவராத்திரியை **மகாசிவராத்திரி** எனப் போற்றுகின்றனர். மாசி மாதத்து தேய்பிறையின் இறுதிநாளான 14ம் நாளில் கிருஷ்ணபட்சத்து சதுர்த்தியில் வரும் மகாசிவராத்திரி அன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள் முழுவதும் உண்ணாநோன்பிருந்து இரவிலும் தூங்காது கண்விழித்து சிவதியானமும் சிவழிபாடும் செய்யும் விரதம் இந்த மகாசிவராத்திரி விரதம்.

1ம் சாமத்தில் பால் அபிடேகம் சாம்பிராணி தூபம் தாமரைமலர் அலரிமலர் அர்ச்சனை என்பன சாமிக்கு நடாத்தப்படும் வில்வம் பத்திரம் வில்லவம் பழம் பயன்படுத்தப்படும். 2வது சாமத்தில் தயிர் அபிடேகம் சண்பகம் தாமரை மலர்களால் அர்ச்சனை சந்தனக்கட்டைத்தூபம் துளசி பத்திரமாகவும் பலா பழமாகவும் பயன்படுத்தப்படும். 3வது சாமத்தில் நெய் அபிடேகமும் குங்கிலிய தூபம் பிச்சி செங்கழுநீர் மலர்களால் அர்ச்சனைகளும் அறுகு பத்திரமும் மாதுளம் பழமும் பயன்படுத்தப்படும். 12 அல்லது 24 வருடங்களுக்கு தொடர்ச்சியாக மகாசிவராத்திரி அன்று விரதம் இருத்தல் வழமையாக உள்ளது.

# மகாசிவராத்திரி குறித்த சில விளக்கங்கள்

## 01. மகாசிவராத்திரி உயிர்களினதும் உலகினதும் உற்பத்தித் தினம்


இருளிலிருந்தே அண்டங்களும் உலகும் தோன்றின என்பது பேராலி ("பிக்பொங்") விஞ்ஞானநிலை. இதன் மெய்ஞ்ஞானநிலையே சிவராத்திரி. உலகும் உயிர்களும் ஒளிமயமாக நீள் ஒளியாக நின்ற சிவப்பேரொளி நீளத்தால் குறுகிய பொழுது இலிங்கமாக ஒளிர்ந்தது. இலிங்கம் என்பதற்கு ஒளிர்வு என்றும் பொருள் உண்டு. இலிங்கம், சிவம் சக்தி நாதம் விந்து சதாசிவம் மகேஸ்வரன் சுத்தவித்தை என்ற சிவதத்துவத்தில் சிவத்தின் அருவமும் அருஉருவமும் உருவமுமான நிலைக்கான குறியீடாகவே தோன்றியது.

ஏதேனும் ஒரு பொருளின் சிறப்பியல்பை உணர்த்தும் அடையாளத்தை அல்லது குறியை உணர்த்துவது இலிங்கம். சைவ இலக்கியங்களில் எதனுள் யாவும் ஒடுங்குகின்றனவோ அது இலிங்கம் எனப்படும்.. வேள்வி வழக்கில் யோனி வேள்விக்குண்டத்தையும் இலிங்கம் அதனின்று எழும் தீயையும் குறிக்கும். யோகப் பயிற்சியில் ஆறு ஆதார சக்கரங்களும் யோனி எனவும் அவற்றுள் எழும் ஒளி இலிங்கம் எனவும் பேசப்படும். வடமொழியில் ஆண் பெண் அலி எனும் பால்நிலையினை புருஷலிங்கம் ஸ்த்ரிலிங்கம் நபும்ஸகலிங்கம் என அழைப்பதினால் இலிங்கம் என்பதை அதன் பல்பொருள் குறிக்கும் தன்மையைக் கவனத்தில் எடுக்காது ஆண்குறி பெண்குறியின் சேர்க்கை நிலை என்ற கருத்தே பெருவளர்ச்சி பெற்றது. ஆண்குறியைக் குறிக்கும் சொல்லான சிசுன என்பது சிசுனதேவ என வேதத்தின் இருபகுதிகளில் வந்ததினால் இலிங்கம் ஆண்குறியினைக் குறிக்கிறது என்ற தவறான எண்ணம் பலமான கருத்தாக மாற்றப்பட்டது. மக்டொனால்டு என்னும் ஐரோப்பிய ஆய்வாளர் .இலிங்கம் என்றால் அது ஆண்குறியைக் குறிக்கிறது என்ற கருத்தை மேற்குலக மட்டத்திலும் பரப்பிச் சென்றார்.

**ஆனால் உண்மையில் இலிங்கம் என்பது குறிகளற்ற இறைவனின் குறியீடாக வடிவமற்ற கடவுளின் வடிவ அடையாளமாகவே தமிழர் சைவமரபில் தோன்றியது. அளவிட முடியாத அண்டவெளியின் குறியீடாக உலகம் திகழ்வது போல இறைவனின் குறியீடாக இலிங்கம் அமைந்தது.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந்தன்மை வளப்பெருங்காட்சி
ஒன்றனுக்கொன்று நின்ற எழில்பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
இல்நுழைகதிரின் துன்அணுப் புரையச்
சிறியவாகப் பெரியோன் தெரியின்

என்பது மாணிக்கவாசகர் திருவண்டப் பகுதியிவ் தரு அருங்காட்சி. ஞாலம் என்றால் தொங்குதல் என்று பொருள். அண்டத்தில் தொங்குவதால் நாம் வாழும் பூமி ஞாலம் எனப்பட்டது. உருண்டை வடிவான இந்த உலகம் அண்டத்தின் ஒரு பகுதியே. இந்த அளப்பரிய வளங்கள் நிறைந்த அண்டங்கள் என்னும் இயற்கைக்காட்சி கோளங்கள் கிரகங்கள் நட்சத்திரங்கள் சூரிய சந்திர்கள் என நூற்றொரு கோடியின் மேற்படி விரிந்து பால்வெளியிலும் அண்டவெளியிலும் அண்டவெளிக்கப்பாலும் ஒன்று மற்றொன்றுடன் நிகழ்த்தும் தொடர்பினால் ஏற்படும் அழகினை விபரிக்க இயலாது.

இவ்வாறு பிரமாண்டத் தன்மையைக் காட்டும் இதே இயற்கைதான் வீட்டில் கூரையில் இருக்கும் சிறுதுவாரத்தின் வழி சூரிய ஒளி உள்ளே வருகையில் அந்த ஒளிக்கதிரில் பல நுண்துகள்களாக அசைகின்றன. .இது இறைவன் அறிய இயலாத பெருவடிவாகவும் நாம் உணரும் அருள்வடிவாகவும் திகழும் இறைத்தன்மையை நமக்கு எடுத்து விளக்குகிறது. திருவண்ணாமலை நீள் ஒளியாக நின்ற பெருநெருப்பு குளிர்ந்து வந்த மலை என்பது நம் முன்னோர் நம்பிக்கை. அவ்வாறே நீள் ஒளியாக நின்ற பேரொளி நீளத்தால் ஒடுங்கித் தந்த திருக்காட்சியே இலிங்கம் என்பது நம்மவர் மனத் திண்ணம்.



திருஞானசம்பந்தராலும் சுந்தரமூர்த்தி நாயானராலும் பாடப்பெற்ற திருக்கேதீஸ்வரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பரின் தேவாரச் சிந்தனை சிவராத்திரியின் பொருள் விளக்கும்



ஊனினுள் உயிரை வாட்டி
உணர்வினர்க்கு எளியர் ஆகி
வானினுள் வானவர்க்கும்
அறியலாகாத வஞ்சர்
நான்எனில் தானே என்னும்
ஞானத்தார் பத்தர் நெஞ்சுள்
தேனும்இன் னமுதும் ஆனார்
திருச்செம்பொன் பள்ளியாரே.

திருச்செம்பொன்பள்ளியிலே திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச்செய்த இன்தமிழ்த் தேவாரம். இறைவன் குறித்த அற்புதமான அனுபவத்திரட்டு

உயிர் தன் வினைகளினால் தேடிய மலங்களிலிருந்து விடுபடுவதற்காக உடலினுள் அதனை இணைத்து அதன்வழி இன்பதுன்பவேதனைகளை அனுபவித்து வாடச்செய்து தன்னுடன் கூடச்செய்வது இறையருள். சமணமும் பௌத்தமும் உயிரின் வினைப்பயன் தானாகவே உயிரை வந்தடையும் எனக் கூற அதனை மறுத்து வினைப்பயன் சடத்துவத்தன்மையாளது அது தானாகவே உயிரை இயக்கும் வல்லமையற்றது என்பதினால் உயிர் விடுபடமுடியாத காரிருளில் கிடந்து துன்புறும் என்பத நம்முன்னோர் எண்ணம். இதனால் ஆணவத்துடன் கூடிப் பேரிருளில் கல்போன்று உணர்வற்றுக் கிடக்கும் உயிருக்கு இறைவனின் திருவருளே இயக்கத்தைக் கொடுக்கிறது. அதன்வழியே நியதி காலம் என்னும் இருதளங்களில் கலை அராகம் புருடன் என்னும் தத்துவங்களைப் பெற்று உயிர் வாழத்தொடங்குகிறது. இதனால் இந்த வாழ்வு என்பது துன்பமானதாக இருப்பினும் உயிரை வாட்டினும் அதுவே ஆன்மா இறைவனுடன் இணைவதற்கான வினைகழித்தலுக்கான வழியாகிறது.

ஆனால் உயிரினை வாழ்விக்கும் இறைவன் அதனைத் தனியனாகத் தவிக்க விடவில்லை.. குறிப்பாக மனிதப்பிறப்பில் நியதி என்கிற விதிமுறை ஒழுங்கிற்குக் கட்டுப்பட்டு தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றுவித்து ஒடுக்கப்படும் காலம் என்பதனை எல்லைக்கோடாக் கொண்டு வாழும் உயிரின் ஆணவத்தைக் கலைக்கும் இறைசக்தியாகத் கலை உயிருக்கு அமைகிறது. அறிவு முதலாக நுண்கலைகள் அனைத்தும் உயிர் விளக்கத்தைப் பெறத் தெளிவைப் பெற உயிரை அனுபவப்படுத்துகின்றன. ஆனால் இந்த அறிவில் அல்லது நுண்கலைகளில் வளரும் உயிர் அதனால் ஆணவத்திலிருந்து விடுபடுவதற்குப் பதிலாக அந்த அறிவின் கலையின் ஆற்றலுக்குப் புகழுக்குத் தானே காரணம் என ஆணவத்தில் வளர முற்பட்டு மேலும் மேலும் படிக்க வேண்டும். மேலும் மேலும் புகழ் சேர்க்க வேண்டும் அதிகாரங்களைப் பெருக்க வேண்டும். தான் சொல்வதே சரி எனச் சாதித்து நான் என்னும் அகங்காரத்தை வெளிப்படுத்தித் தன்னை விடப் பெரியவனில்லை எனக்காட்டி நான் என்னும் அகங்காரத்தையும் எல்லாவற்றையும் தன்னுடையதாக்கி அனுபவிக்க வேண்டுமென எனத என்னும் மமகாரத்தையும் வளர்க்க முற்படுகிறது. உயிரின் இந்த இயல்பு தான் அராகம். இந்த நியதி காலம் கலை அராகம் என்பவற்றுடன் கூடியது தான் புருடன் என்னும் மாந்தர் நிலை் மாந்தல் என்றால் மதி மயங்கும் அளவுக்கு அருந்துதல் என்னும் பொருள். மனிதமனது இந்த மாந்தல் என்பதைத் தன் இயல்புநிலையாகக் கொண்டது என்பதாலேயே மாந்ததைக் குறிக்க மனிதர் என்ற சொல்லாட்சி தோன்றியது. இந்த நியதி காலம் கலை அராகம் புருடர் என்ற பஞ்சகவசம் அணிந்தவராகவே எந்த மனிதனும் உள்ளான்.

இந்நிலையில் இவற்றுக்கு ஊடாக உயிர் பெறும் அனுபவத்தை அது தன்னுடைய வினைகளைக் கழிப்பதற்கே என்பதை உணரச்செய்து வழிநடத்த இறைவனே உயிருடன் உடன் உள்ளான் என்பதை உணருபவரே தளைகளிலிருந்து விடுபடும் இருவினை ஒப்பினை அடையும் வல்லமை உடையவராவார். இதனால் தான் உணர்வினுக்கு எளியராக இறைவன் அருள்கின்றான். இறைவனை உணரும் உரைக்கும் ஆற்றல் ஆன்மாவுக்கு இல்லை. இதனாலேயே கண்டவர் விண்டததுமில்லை. விண்டவர் கண்டதுமில்லை எனச் சிவாக்கியர் கூறிச்சென்றார். இந்நிலையில் பக்குவப்படுத்தலுக்கு உடனாகவும் பக்குவப்பட்ட உயிருக்கு உணர்வாகவும் இறைவன் தன்னைத் தன் பெருங்கருணையினால் எளியராக்கி உயிருடன் உறவாடுகிறான். இதனாலேயே மாணிக்கவாசகப் பெருமான் அவன் அருளாலே அவன் தாள் பணிந்து என்றார். இம் மணிவாசகத்திற்கு வழிகாட்டியாக அப்பர் பெருமான் அருளிய திருவாக்குத் தான் "உணர்வினார்க்கு எளியர் ஆகி என்னும் தேவார வரிகள் அமைகின்றன. இறைஉணர்வு கொள்ள முனைந்து அவனைத் தேடத்தொடங்கிய போற்றத் தொடங்கிய அவன்நினைவில் வாழத் தொடங்கிய உணர்வினார்க்கு - அடியார்க்கு எளியவனாக, அவர் அவர் அறிவுக்கு ஏற்பத் தன்னை வெளிப்படுத்தும் அன்பாளன் அருளாளன் இறைவன் என்பது அப்பர் அனுபவ மொழி. இதற்குச் சிறந்த உதாரணமாக அமைவது கண்ணப்பநாயனார் வரலாறு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் தன்னைத் தம் தன்னலத்திற்காக அறிய முற்படுபவர்களுக்குத் தேடமுற்படுபவர்களுக்கு ஒருநாளும் தான் யார் என்கிற அந்த உண்மையை அதன்வழி பிறக்கும் பேரின்பத்தை அளிப்பதில்லை. வானவர்கள் நல்வினைப்பயனால் தேவர்களாகத் திகழ்ந்தாலும் அவர்கள் தங்களின் தன்னலத்திற்கே இறைவனைக் குறித்த உண்மைகளைத் தேட முற்படுபவர்களாக உள்ளனர். காப்பதற்கும் அழிப்பதற்கும் புகழ் வாழ்வு தருவதற்கும் இறைவனை வேண்டும் போற்றும் தன்மையினர். ஏன் படைத்தலை நிகழ்த்தும் பிரம்மாவும் காத்தலை நிகழ்த்தும் திருமாலும் தமக்குள் யார் பெரியன் என்ற புகழினை நிலைநிறுத்தத் தம்முள் முரண்படுகின்றனர். மோதுகின்றனர். அந்நேரம் எல்லை அறிய முடியா நீள் ஒளியாய் அவர்கள் முன் தோன்றுகிறான் இறைவன். நீள்ஒளியாய் நிற்கும் சிவத்தின் அடியையும் முடியையும் கண்டறிபவரே பெரியவர் என்னும் மொழி வானில் ஒலிக்கிறது. அந்தப் பேரொளி தான் தம் அகத்துள் இருக்கும் சிவனொளி என அறியாத மூடர்களாய் வானில் முடிதேடி அன்னத்தில் பயணிக்கிறார் பிரமன். மண்ணைக் கூர்ங் கொம்புடைர் பன்றியாய்க் கடைந்து குடைந்து முடிதேடுகின்றான் திருமால். சிவனின் திருமுடி நின்று உதிரும் தாழம் இலை கண்ட பிரம்மனுக்கும் குறுக்கு வழியில் புகழ் ஈட்டும் ஆசை வருகிறது.. தாழம் இலையிடம் நான் உன்னைத் திருமுடியிருந்து பறித்து வந்தேன் எனப் பொய்யுரை என்கிறார பிரம்மன். தாழம் இலையும் இயைந்தது. அச்சணமே பொய்மையை வாய்மையாக்கப் முயன்ற பிரம்மனுக்கு கோயில் இல்லை என்ற தண்டிப்பும் பொய்கூற ஒத்துழைத்த தாழம் பூ சிவபூசைக்குரியதல்ல என்ற தண்டனையும் கிடைத்தன. நீருடன் கலந்த பாலிலிருந்து நீரைப்பிரித்துப் பாலை உண்ணும் நுண்ணறிவுடை அன்னததை அறிவின் வழி படைப்பினை நிகழ்த்துபவன் என்னும் தன்மையின் குறியீடாக வாகனமாகப் பெற்ற பிரமன் அறிவுமயங்கி ஆசைவழி சென்று தொழப்படும் நிலை இழக்கிறான். புகழாசையால் காத்தலை மறந்த திருமாலும் தனக்குக் குளிர்மைதேடி மண்கிளறும் பன்றிபோல் கூர்ங்கொம்பால் மண் குடையும் பன்றியாக மாறிவிடுகிறார். ஆசை யாரைத்தான் விட்டது என்பதற்கு உதாரணமாகி விட்ட அவ்விருவருமே நீள் ஒளியாய் நின்ற அந்தச் சோதிப்பிழம்பினால் அறிவொளி பெற்றனர். அகந்தை அடங்கியது. அறிவு விழிப்புற்றனர். குணம்குறியற்ற இறைவனே சோதியாகி நின் கருணையால் அகஇருளகற்றிய அன்பனே என்றும் நாம் தொழுதிடு உருவாய் நீ நின்றிடல் வேண்டுமென்றனர். அருண் மலையாகச் செந்தணல் குன்றாக அந்த நீள் ஒளி திருவடிவு கொண்டது. அருண்மலை என்னும் அந்த அக்கினிக் குன்று குளிர்ந்து நிலம் மீது எழுந்த மலையாகத் திருவண்ணாமலையாக தமிழ்மண்ணின் சிவத்தலமாக மாறியது என்பது மரபு. அதே வேளை தீப்பிழம்பின் அகலம் ஒடுங்கிக் குளிர்வுற்று திருவண்ணாமலையாக நீளம் குறுகி சிவலிங்கமாகச் சிதம்பரத்தில் பிரம்மாவும் திருமாலும் தொழு அற்புத வடிவாக நள்ளிரவிலே அமர்ந்த கோலமே லிங்கோற்பவ மூர்த்தி என்னும் சிவமுகூர்த்தம் என்று தொழப்படுகிறது.





கோயில்களில் கருவறைப் புறச்சுவரில் இந்த இலிங்கஉற்பவ மூர்த்தி கோயில் கொண்டிருப்பதைக் காணலாம். இலிங்கத்தின் மேற்புறத்தில் சிவனின் திருமுகம் காணப்பட இலிங்கத்தின் அடிப்பாகம் ஒளிமயமாகக் காணப்படும். அருகில் நிலத்தில் திருமால் வராகமாக நின்று தொழ வானில் பிரம்மன் அன்னவாகனத்தில் அமர்ந்து தொழ இந்த லிங்கோற்பவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூர்த்தியின் திருவுருவம் திருக்காட்சி தரும். இந்நிலையைத் தான் "வானினுள் வானவர்க்கும் அறியலாகாத வஞ்சகர்" என அப்பர் தமிழோவியமாகத் தீட்டினார். ஔவையும் அரிது அரித மானிடர் அதல் அரிது என்றது மானிடப்பிறப்பில் மட்டும் தான் இறைவன் வந்து ஆட்கொள்ளும் அருள்நிலை கிட்டும் என்பதை வலியுறுத்தவே. தேவராக இருப்பினும் கூட வானவராக இருப்பினும் கூட இறைவனை அறிதல் தெளிதல் அடைதல் இயலாது. மானிடப் பிறப்பில் மட்டுமே அந்தப் பெருமை அருமை இனிமை கிட்டும்.

"நான்எனில் தானே என்னும் - ஞானத்தார் பத்தர் நெஞ்சுள் - தேனும்இன் னமுதும் ஆனார் - திருச்செம்பொன் பள்ளியாரே" என்னும் அப்பரின் திருமொழி நான் என்னும் அகந்தை விட்டு எனது என்னும் மமதை விட்டு எல்லாம் அவனே – எல்லாம் அவன் செயலே என்னும் அடியவர் உள்ளத்தில் தேனாய் இன்அமுதாய் உணர்பாவான் இறைவன் என்கிறது. இந்த உணர்வினைப் பெற்றவர் தூக்கம் மறப்பார் துன்பம் இன்பம் துறப்பார். அல்லும் பகலும் ஆண்டவன் நினைவில் திளைப்பார். சிவோகம் பாவம் என்னும் உயர் நிலை கைகூடி இவ்வுலகில் அனுபவிக்கும் இன்பம் துன்பம் நல்லது கெட்டது எல்லாவற்றையும் சிவச்செயல் என்று நோக்கி அவற்றின் வழி புதிய வினை தோன்றாது வாழ்வர்.. இந்த மலபரிபாகம் நடைபெறும் வேளை அதுவரை திரோதான சக்தியாக நின்று மறைத்தல் வழி உயிர் வினைப்பயனை அனுபவிக்க வைத்த சக்தி திருவருளாக வெளிப்பட்டுச் சிவத்தைக் காட்டும். இதனால் இவ்வுலகிலேயே சிவானுபவம் பெறும் உயிர் உடல் உதிர்கின்ற நேரத்தில் சிவத்துடன் தடலையாக இணைந்து அமைதியுறும். .இதனை உணர்ந்தவர் இலிங்கோற்பவம் நிகழ்ந்த அந்த நள்ளிரவினை மகாசிவராத்திரியாகப் போற்றிச் செய்யும் விரத வழிபாடே சிவராத்திரி.



## மக்களை இறைவனுடன் இணைக்கும் இரவே சிவராத்திரி

மன்மதன் அம்புவிடுத்ததால் அவனின் காமச்செயலுக்காக அவனை எரித்த சிவபெருமானின் கண்களை உமையவள் மூடியதால் ஏற்பட்ட இருள் இரவாகச் சிவராத்திரியைக் கருதுபவர்கள் உளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வேடன் மரத்தின் மீதிருந்து புலிக்கு அஞ்சி தூங்காது இருக்கப் பறித்துப் போட்ட இலைகள் மரத்தடியில் இருந்த இலிங்கத்திற்கு பூசையாக மாறி அவன் அருள் பெற்ற இரவு மகாசிவராத்திரி என்பர்.

அவ்வாறே மாபலி எலியாக இருந்த பிறப்பில் இந்தஇராத்திரியில் கோயில் விளக்கைச் சிவராத்திரி இரவில் தற்செயலாகத் தட்டித் தூண்டியதால் மறுபிறப்பில் மாபலியாகி பலம்கொண்டான் புவியாண்டான் என்பர். இவ்வாறாகப் பல நம்பிக்கைக் கதைகள் சிவராத்திரி குறித்து இந்திய உபகண்டம் எங்கும் நிலவுகிறது. இந்தக் கதைகள் எல்லாம் சிவராத்திரி மக்களை இறைவனுடன் இணைக்கும் இரவு என்கிற உணர்வையே ஊட்டுகின்றன.

அவ்வாறே இலிங்க வழிபாட்டின் முக்கிய தினமான இந்நாளில் இலிங்க வழிபாடும் மக்கள் வழிபாடாகவே வளர்ச்சியுற்றது என்பதை மனதிருத்தல் அவசியம். உயிர்பிரிந்த பின் புல்லின் நுனி இலைகள் என்பவற்றில் தங்குகின்றன என்ற நம்பிக்கையின் அடிப்படையில் மரவழிபாடு தோன்றி பின்னர் மரங்கள் இறைவனின் குறியிடாக வழிபடப்பட்ட காலத்தில் மரத்தின் பட்ட குற்றியும் கந்தழி என்ற பெயரில் தொடர்ந்து தொழப்பட்டது. அவ்வாறே நடுகல் மரபிலும் வீரவணக்க வழிபாடாக கல் வணங்கப்பட்டது. இவற்றின் வளர்ச்சி நிலையாகவே இலிங்க வழிபாடு தொடர்ந்தது என்கிற ஆய்வுகளின் அடிப்படையில் பார்த்தாலும் இலிங்க வழிபாடு தொன்மை மிகு தமிழ்மக்கள் வழிபாடாகவே உளது.

எனவே தமிழ் மக்கள் தம் இன்னல் நீங்கி உலகில் இன்பம் பெருகச் சிவலிங்க வழிபாட்டைச் செய்தனர். இதனால் தான் இரஷ்யாவரை இலிங்க வழிபாடு சிறப்புற்றிருந்தமைக்கான வரலாற்றுத் தடயங்கள் காணப்படுகின்றன் இதனால் சிவவழிபாடு உலகமக்களின் வழிபாடாகவும் இருந்தமையும் தெளிவாகிறது. இத்தகைய வரலாற்றுச் சிறப்ப மிகு சிவவழிபாட்டின் முக்கிய வழிபாடான சிவராத்திரியில் சிவதியானம் சிவவழிபாடு வழி இறைவனுடன் இணைவதே சிறப்பு. புறவழிபாட்டு வழி உளத்தை இறைமயப்படுத்தி அவனருள் பெறுவழியே மகா சிவராத்திரி. அகத்தைப் புனிதப்படுத்தி புறத்தில் அமைதி தவழ சிவனருள் வேண்டுவோமாக!






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'வங்கி முறைமையிலிருந்து விடுபட்டாலே சாதாரண மனிதனின் கடன்சுமை நீங்கும்'

## புதிய பணவைப்பு முறையின் தேவை உணரப்படுகிறது

## அனைவர்க்கான சமுதாயநிதி வைப்பகம் காலஅவசியமாகிறது




**மக்கள் என்றுமில்லாத அளவுக்கு கடன்சுமைகள் விலையுயர்வுகள் வேலையிழப்புகளைச் சந்தித்துள்ள நிலையில் பார்க்கிலேஸ் வங்கி அதனுடைய நூற்றுக் கணக்கான பில்லியன் நிகரஇலாபத்தை தங்களுடைய வர்த்தக வாடிக்கையாளர்களின் கற்றோர் கூட்டத்தினரிடையிலும் முதலீட்டாளர்கள் இயக்குனர்கள் இடையிலும் மட்டும் பகிர்ந்து கொண்டமையை எதிர்த்து சாதாரண மக்கள் தங்கள் வைப்புக்களை வங்கியிலிருந்து அகற்றவேண்டுமென்று இலண்டன் மத்தியில் உள்ள பார்க்கிலேஸ் வங்கி முன்னால் பெப்ருவரி மாதம் 10ம் திகதி நடாத்தப்பட்ட போராட்டத்தில் ஜோர்ஜ் கபிரியேல் என்னும் வங்கி வாடிக்கையாளர் அவரது வங்கி அட்டையைநறுக்கி எறிகின்றார்.** – நன்றி: பிரித்தானியாவின் கார்டியன் பத்திரிகைக்கு உரித்தாகுக. நிழற்படக்கலைஞர் லியோன் நியல் எடுத்த ஏ எவ் பி கேயிட்டியின் நிழற்படம்.

பிரித்தானியா உட்பட ஐரோப்பா எங்கும் சாதாரண மக்களிடை பணப்புழக்கம் குறைவடைந்து வருகிறது. அதே நேரத்தில் பணவீக்கமும் விலைஉயர்வுகளும் வேலையின்மையும் சாதாரண மக்களிடை பரந்த அளவில் வறுமை வாழ்வு வெறுமை வாழ்வு வேகமாக வளரச்செய்கின்றது. இந்த பொருளாதார மந்தநிலை உலகப் பெரு பொருளாதார மந்த நிலை ஒன்றைத் தோற்றுவிக்கக் கூடும் என்கிற அச்சம் பொருளாதார நிபுணர்களால் வெளியிடப்பட்டு வருகிறது.

இந்நிலையில் பொருளாதாரம் அரசியல் வர்த்தகம் வாணிபம் என்பவற்றின் சுழற்சிகள் அத்தனைக்கும் அச்சாணியாக உள்ள சாதாரண மனிதர்களிடை வங்கிகள் தங்கள் பணத்தைச் சுரண்டுவதினாலேயே தங்களின் வாழ்வு பெரும்பாதிப்புக்கு உள்ளாகிறது என்ற உணர்வு தலைதூக்கியுள்ளது.

இதனை உறுதி செய்வது போல பிரித்தானியாவில் அரசாங்கம் வங்கிகளின் பணத்தட்டுப்பாட்டை நீக்கவென பல மில்லியன் பவுண்ஸகளை பலதடவைகள் பெரியதெரு வங்கிகள் (High Street Banks) எனப்படும் பாரம்பரிய வங்கிகளுக்கு வழங்கிய போதிலும் அவை அவற்றை கடன்களால் தங்களின் வரவுசெலவுக் கணக்கில் ஏற்பட்ட நட்டத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுசெய்யப் பயன்படுத்தினவே தவிர அரசாங்கம் புதிதாகக் கொடுத்த பணத்தை மக்களிடை வர்த்தகம் வணிகம் என்பவற்றை அவர்கள் கொண்டு நடாத்துவதற்கான கடன் உதவிகள் மூலம் பணச்சுழற்சிக்கு விட மறுத்து விட்டன.

இதனால் அரசாங்கம் மக்களின் வரிப்பணத்திலிருந்து வழங்கிய பில்லியன் கணக்கான பொருளாதார மீட்பு முயற்சிக்கான பணங்களும் வங்கிகளின் வயிற்றில் முடங்கி விட்டன. இது பணத்தின் திரவத்தன்மையில் பலத்த தட்டுப்பாட்டை உருவாக்குவதால் வேலையிழப்பு புதிய வேலைகள் உருவாகாமை என்பவற்றால் உழைக்க முயற்சிக்கும் சாதாரண மக்களுடைய முயற்சிகளும் காலமும் இழப்பாகின்றன.

உள்ளவர்களுக்கும் இல்லாதவர்களுக்கும் இடையிலான இடைவெளி மிக அதிகமாகிறது. போட்டிச் சந்தைப் பொருளாதாரத்தில் இயங்கும் மேற்குலகில் இவை சாதாரண மக்களின் வாழ்வில் அதுவும் குறிப்பாக இளையவர்களின் வாழ்வில் அவர்களின் வேலைவாய்ப்புக்கள் படிப்புக்கள் பயிற்சிகள் என்பவற்றை மறுக்கின்ற பொழுது கடந்த இலைதுளிர் காலத்தில் இலண்டனில் நடைபெற்றது போன்ற இளையவர்களின் வர்த்தகநிலையங்களின் கொள்ளைடியப்புகள் எரியூட்டல்கள் போன்ற வன்முறைகள் தூண்டப்படலாம் என்கிற அச்சம் தொடர்கிறது.

இந்நிலையில் பெரியதெருவில் உள்ள வங்கிகளுக்கு எதிரான போராட்டங்களை மக்கள் ஜனநாயகவழிகளில் வேகப்படுத்தி எதிர்ப்பை பொதுசன பாதிப்பு அற்ற முறையில் வெளியிடவும் செய்கின்றனர். ஆயினும் இவைகூட சில ஐரோப்பிய நாடுகளில் உணர்ச்சி உந்தல்களால் வன்முறை எதிர்ப்புகளாகவும் மாறி உடமைகளுக்கும் நாளாந்த வாழ்வின் அமைதிக்கும் பங்கம் விளைவிக்கவும் செய்துள்ளன.




இந்நிலையில் தற்பொழுது உள்ள 15ம் நூற்றாண்டின வணிகப் பொருளாதாரத்துடன் தோற்றம் பெற்று பெருவளர்ச்சி கண்டு நிற்கும் வங்கி வைப்பு முறைக்கு மாற்றீடான மக்கள் பணவைப்பு முறை ஒன்றினை உருவாக்கி பெரிய தெரு வங்கிகள் என அழைக்கப்படும் பாரம்பரிய வங்கிகளிலிருந்து மக்கள் பணத்தை விலத்தச் செய்தாலே மக்களிடை பணத்தின் சுழற்சியும் திரவத்தன்மையும் வழமைக்கு மீளும் என்கிற எண்ணம் பொருளாதாரச் சிந்தனையாளர்களிடை தலைதூக்கி வருகிறது.

'கிரடிட் யூனியன்' (வைப்பு ஒன்றியம்) என்கிற இலாப நோக்கற்ற தனது உறுப்பினர்களிடையில் மிகையினை பகிரும் அமைப்பில் ஈட்டப்படும் இலாபம் அந்தக் கிரடிட் யூனியனை உருவாக்கிய சமுதாயத்திடையிலேயே செலவிடப்படும் அல்லது முதலிடப்படும் என்பதினால் இந்த அமைப்புக்கள் மக்களால் வங்கிகளுக்கு மாற்றீடாகக் கொள்ளப்படுவது உண்டு. ஆனால் கிரடிட் யூனியன்கள் தாங்கள் பதியப்படும் நிலப்பரப்பு எல்லைகள் தாண்டி செயற்படும் உரிமை இல்லாதனவாக இருப்பதினால் இவற்றின் நடைமுறை வேகம் குறைவாகவே காணப்படுகிறது. 400 கிரடிட் யூனியன்கள் பிரித்தானியாவில் உள்ளன. ஆயினும் இவற்றால் வங்கிகளின் வேகமான பணச்சுழற்சியினைக் கையாளமுடியாதிருப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறைப் பிரச்சினையாக உள்ளது. அத்துடன் இவற்றின் மக்கள் வைப்புக்கான வைப்புஊக்குவீதம் (வட்டி) வங்கிகளின் வட்டியை விட மிகக்குறைவாக இருப்பதினால் இவற்றால் அதிக வைப்பாளர்களை கவரஇயல்வதில்லை.

'பில்டிங் சோசைட்டிஸ்' (கட்டியெழுப்பும் சமுகங்கள்) என்கிற பணவைப்புச் செய்யும் நிறுவனங்கள் உள்ளூரில் உள்ளவர்களை உறுப்பினர்களாக்கி தொடங்கப்பெற்ற இந்நிறுவனங்கள் அந்த உறுப்பினர்களுக்கே முற்றிலும் சொந்தம் என்ற அடிப்படையில் இயங்குகின்றன. இதனால் இவை இயங்கும் பிரதேசங்களில் தெளிவான அடையாளத்தைப் பெறுகின்றன. அத்துடன் உள்ளூரவர்களுடன் வீடுகள் கட்டக் கடன் வழங்கல் தொழில்கள் முயற்சிகளுக்கு கடன்வழங்கல் போன்ற நடவடிக்கைகளால் தம்மை இறுகப் பிணைத்துக் கொள்கின்றன. தற்பொழுது 146 'பில்டிங் சொசைட்டிஸ்' களின் குடைத் தலைமையாக 'நேசன் வைட்' என்னும் தலைமை அமைப்பு செயற்படுகிறது.



'நேசன் வைட்' ஏடீஎம் (ATM) வலைப்பின்னல் வழியாகப் பணத்தைப் பரிமாறுவதற்கான இலவச வசதியினையும் வாடிக்கையாளர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இதனால் 'நேசன்வைட்' ஐயும் இது போன்ற மற்றைய 'பில்டிங் சொசைஸ்டி'களையும் மக்கள் பெரியதெருக்களில் உள்ள பாரம்பரிய வங்கிகளுக்கு மாற்று பணவைப்பகங்களாகப் பயன்படுத்துகின்றனர். ஆனால் இவைகள் எல்லாமே செயற்பாட்டு நிலையில் தாங்களும் பாரிய வங்கி அமைப்பு முறையின் சாயலையே தழுவிட முயல்கின்றன. இதனால் செயற்பாட்டு நிலையில் இலாபத்தை மையப்படுத்திய போக்கு ஏற்படுவது தவிர்க்கமுடியாததாகிறது. இந்நிலையில் சமுகமுதலீட்டு நிதிநிறுவனங்களை மக்கள் பணத்தை வைப்பிடுதலுக்கான வங்கிப் பதிலீட்டுமுறையாக வளர்த்தெடுக்கும் முயற்சிகள் தொடங்கியுள்ளன. ஒரு ஊருக்குத் தேவையான விற்பனை நிலையங்களையோ சேவைநிலையங்களையோ தொடங்க விரும்பும் பொழுது அத்தகைய விற்பனை அல்லது



**பிரித்தானியாவில் மக்களின் பங்கில் தொடங்கப்பெற்ற கடை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவைநிலையங்களின் பங்கினை அந்த ஊரிலே உள்ளவர்களே வாங்கி அதனை செயற்பட உதவுவது என்பதே இந்த சமூக முதலீட்டு நிதிநிறுவனங்களின் முயற்சியாகிறது. ஊருக்கான மின்வழங்கல் நீர்வழங்கல் திட்டங்களைக் கூட மக்களின் பங்குப்பணத்தைக் கொண்டு வங்கிகளின் தலையீடின்றி செய்யும் முயற்சிகளாக இவை வளர்கின்றன. இந்த முன்மாதிரிகையைப் பின்பற்றி உலகின் பெரும்பாலான நாடுகளில் வாழும் தமிழர்கள் தங்களுக்கான ஒரு தமிழர் சமுதாய நிதி அமைப்பு ஒன்றை உருவாக்கி அதன்வழி தமிழர்களின் வறுமை அறியாமை நீக்கி வளத்தில் தாமும் பயன்பெற்றால் என்ன என்னும் ஆதங்கம் பிறக்கிறது.


இதற்கு உலகத் தமிழினமே பதில் கூறவேண்டும். இன்றைய உலகில் வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் பணப்பரிமாற்றம் அதற்கான இலாபத்தை இழக்காத நிலையில் தமிழ்மக்களின் வறுமை அறியாமை அகற்றுவதற்கான ஆக்கபூர்வ வழிகளில் உதவ இது உதவும்.

ஆனால் இத்தகைய தமிழர்களுக்கான சமுதாய நிதி வைப்பகங்கள் வாடிக்கையாளர்களின் வளர்ச்சி என்ற போக்கில் தம்மை வளர்க்க வேண்டுமே தவிர இதனைப்பொதுப்பணம் எனக் கருதக்கூடாது. அதாவது இத்தகைய தமிழர்சமுதாய வைப்பகங்கள் தமது நிதிநிறுவனப்பணிகளை ஒரு இலாபம் கருதா சமுதாயநிறுவனமாகவும் வாடிக்கையாளர்களின் நலன்களை ஏற்புடைய முறையில் பேணம் நிறுவனங்களாகவும் தம்மை நிலைநிறுத்தினாலே வைப்பில் இடுவதற்கான நம்பிக்கையும் ஆர்வமும் தமிழர்களிடை பிறக்கும்.

இன்றைய உலகில் தமிழர்கள் உலகெங்கும் பரந்து வாழ்ந்தாலும் தமிழர்களின் தொன்மையோ தான்மையோ தனித்துவமானது என்பது அனைத்துலக மக்களால் ஏற்கப்படவில்லை என்பது வேதனையான உண்மை. இதற்கான பல்வேறு அரசியல் காரணங்களைக் கூறினாலும் தமிழர் சமுதாயம் ஒரு முதலீட்டுச் சமுதாயமாகத் தன்னை உயர்த்திக் கொள்ளாமையும் அங்கீகாரமின்மைக்கு முக்கிய காரணமாகிறது.

சமுதாய முதலீட்டைச் செய்ய வல்ல இனத்தையே இன்றைய பணப்பொருளாதார உலகம் ஏற்கின்றது- அங்கீகரிக்கின்றது. இல்லையேல் அவர்கள் எவ்வளவு தான் தொன்மை தான்மை கொண்டவர்களாக இருப்பினும் அவர்களைச் சிறுபான்மையினர் எனவும் பழங்குடியினர் எனவும் பல்வேறு அரசியல் அடையாளங்களுக்குள் தள்ளிவிடுகின்றார்களே தவிர அவர்களை ஒரு 'மக்கள் இனம்' என்று அங்கீகரிக்க மறுக்கின்றனர்.

எனவேதான் இன்றைய உலகில் பல்வேறு நாடுகளில் சிதறிக்கிடக்கும் தமிழர்களின் வைப்புக்களை ஒருமுகப்படுத்திய தமிழர் சமுதாய நிதிநிறுவனம் ஒன்றின் உறுதியான வெளிப்பாடு நாளை தமிழர்கள் நல்வாழ்விற்கான முன்நிபந்தனையாகிறது. அத்துடன் பொருளாதார மந்தநிலைகளில் தனிப்பட்ட தமிழனுக்கு அவனது முயற்சிகளுக்கு உயர்ச்சிகளுக்கான உதவிக்கரமாகவும் இது அமையும் என்பது உறுதி.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்கொட்லாந்து 2014லும் வேல்ஸ் 2020லும் தனியரசுகளாகுமா?

**இஸ்கொட்லாந்தைத் தொடர்ந்து வேல்ஸிலும் குடியொப்பக் கோரிக்கை வலுப்பெறுகிறது**



**'கார்டியன்' இல் மாசி 1ம்நாள் ஜான் ஹரிஸ் எழுதிய வேல்ஸூம் பிரித்தானியாவிலிருந்து விலகுமா? என்ற வேல்ஸின் சுதந்திர உணர்வு குறித்த ஆக்கம் வேல்ஸ் மக்களின் இன்றைய அரசியல் நிலைப்பாட்டை எடுத்து நோக்கியது.**

2014ல் நடைபெறவுள்ள இன்றுள்ள பிரித்தானிய ஒன்றுபட்ட அரசு (United Kingdom) என்ற நிலையிலேயே இஸ்கொட்லாந்து தொடர்வதா அல்லது தனியரசாவதா என்ற இஸ்கொட்லாந்தின் குடியொப்பத்தின் பின், ஒன்றுபட்ட பிரித்தானிய அரசு (United Kingdom) தொடருமா என்ற கேள்வி நவீன அரசியல் உலகில் தலைதூக்கியுள்ளது. இ.தனை உறுதி செய்வது போல வேல்ஸில் 2020ல் வேல்ஸூக்கான விருப்பத்தெரிவுக் குடியொப்பம் நடைபெற வேண்டும் என்ற கோரிக்கையும் வேல்ஸ் தேசியக்கட்சியிடை தலைதூக்கியுள்ளது.

நீண்டகால வரலாற்றுத் தொடர்ச்சியைக் கொண்ட இனங்களை ஒற்றையாட்சியின் கீழ் இணைத்து அரசாள்வது என்பது அவற்றின் விருப்பத்துடன் தொடர்பான ஒன்று என்பது இந்தக் குடியொப்பக்கோரிக்கைகளால் மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது. அத்துடன் எவ்வளவு தான் முறைமையான பாராளமன்ற ஆட்சிமுறைமை என்றாலும் கூட தேசிய இனங்கள் பெரும்பான்மையினத்தின் கீழ் தங்களுக்கான உண்மையான முழுமையான முன்னேற்றங்களை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையவில்லை என்ற மனக்குறை அத்தேசிய இனங்களுக்கு இருக்கும் என்பதும் இந்தக் கோரிக்கைகளின் மூலம் மீண்டும் உறுதியாகியுள்ளது.

இந்நிலையில் 2014ல் இஸ்கொட்லாந்து மக்களின் விருப்பத்தெரிவு தனியராச அமைந்தால் அது ஒன்றுபட்ட பிரித்தானிய அரசு என்பதனைக் கேள்விக்குறியாக்கி விடும் என்கிற அச்சமும் தலைதூக்கியுள்ளது. இலங்கை இந்தியா போன்ற நாடுகளில் பாராளமன்ற ஆட்சி முறைமையின் கீழ் அங்கு முந்துவரலாற்றுக் காலம் முதல் வாழ்ந்த மக்கள் இனங்களின் தயாகத் தேசிய இறைமை நிலைகளைக் கவனத்தில் கொள்ளாது ஒன்றிணைத்து பல்லின பல மொழிக் கலாசசாரங்களைக் கொண்ட நாடுகள் என அவற்றுக்குப் புதுவிளக்கமும் கொடுத்துப் பாராளமன்ற முறைமையே சிறந்த ஆட்சிமுறை என அடித்து நிலைநாட்டிய பிரித்தானியப் பாராளமன்றத்தாலேயே தனது ஆட்சிக்கு உட்பட்ட தேசிய இனங்களுக்கான மனத்திருப்தியான ஆட்சியை பிரித்தானியா என்னும் தீவுக்குள்ளேயே வழங்க இயலாதுள்ளது என்பதையே இந்தக் குடியொப்பக் கோரிக்கைகளும் வடஅயர்லாந்தின் போராட்ட வரலாறுகளும் எடுத்துக்காட்டியுள்ளன.




இங்கிலாந்து இஸ்கொட்லாந்து வடஅயர்லாந்து வேல்ஸ் கொடிகள்




இஸ்கொட்லாந்தின் பணத்தாள்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனியரசாகத் திகழ மொழியால் ஒன்றுபட்டால் மட்டும் போதாது குடிமைகள் என்ற உணர்வும் மிக அவசியமாகும்

வேல்ஸ்ம் இஸ்கொட்லாந்தும் தங்கள் தங்கள் தேசியத்தன்மையைப் பேணவேண்டும் என்னும் உணர்வில் மிகுந்த பற்றுதியைக் காட்டினாலும் இஸ்கொட்லாந்து ஒன்றுபட்ட அரசில தொடர்வதற்கான குடியொப்பத்தை நடாத்தக் கோரிக்கை விடுத்த போதிலும் வேல்ஸ் அசெம்பிளி ஏன் பின்நிற்கிறது என்ற கேள்வி வேல்ஸ் தேசிய உணர்வாளர்களிடை எழுந்துள்ளது.

வேல்ஸ் மொழி மேல் உள்ள பற்றையே வேல்ஸ் மக்கள் தமது தேசியத்தைப் பேணல் எனக்கருதுகின்றார்கள். இதனால் வேலை கல்வி வர்த்தகம் இடப்பெயர்வு என்பனவற்றால் தங்கள் தாய்மொழியைப் பேசாது விடுகின்ற பொழுது தேசியத்தன்மையில் தளர்ச்சி வீழ்ச்சி ஏற்படுகிறது. ஆனால் இஸ்கொட்லாந்து மக்கள் குடிமை என்பதற்கு அதாவது தாங்கள் இஸ்கொட்லாந்தின் குடிகள் என்பதற்கு முதன்மை கொடுப்பவர்கள். அந்த வகையில் தங்கள் மண்ணுக்குத் தாங்கள் கடமை செய்தல் வேண்டும் என்ற உணர்வினை வளர்த்துக் கொள்கின்றனர். இந்த வகையில் நோக்கின் தனியரசாக ஒர இனம் தங்களைக் கருதுவதற்கு மொழியால் ஒன்றுட்டால் மட்டும் போதாது. குடிமைகள் என்ற உணர்வும் அவசியமாகிறது என இந்த ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.




மேலும் வேல்ஸ் இஸ்கொட்லாந்து நிலப்பரப்புக்களை எடுத்து நோக்கின் இஸ்கொட்லாந்து மிகப்பெரிய நிலப்பரப்பு ஆனால் வேல்ஸ் சிறியது. இதனால் வேல்ஸ் தனியரசாக நிலைக்க முடியுமா என்ற ஆதங்கம் மக்களிடை தூண்டப்படுவதால் மக்கள் ஒரு திகைப்பு நிலை அடைகின்றனர். பொதுத்துறை வேலைகளிலேயே 27புள்ளி5வீதமான வேல்ஸ் மக்கள் வருமானம் பெறுகின்றனர். இதனால் வேல்ஸின் சுதந்திரம் என்பது வேல்ஸைப் பொருளாதார ரீதியாகப் பாதிக்கும். இன்று சாதாரண வேல்ஸ் குடிகளை எடுத்தால் அவர்கள் தங்கள் பிள்ளைகளின் கல்வி வேலைவாய்ப்புத் தங்களின் குடும்ப வருமானம் உடல்நலசேவைகள் என்பவற்றுக்கே முதன்மை கொடுக்கின்றனர். இதனால் வேல்ஸ் தனியரசானால் தங்களின் நாளாந்த வாழ்வின் பொருளாதாரத் தன்மைக்குப் பாதிப்புக்கள் வரும் என்கிற அச்சம் வேல்ஸ் மக்களிடை நிலவுகிறது. இந்த அச்சத்தை வலுப்படுத்தி ஒன்றுபட்ட பிரித்தானிய அரசில் வேல்ஸ் மக்களை நிலைபெறச்ட செய்யும் வகையிலேயே பிரித்தானியாவின் முதன்மைக்கட்சிகளாகிய கொன்சர்வேடிவ் கட்சியும் லேபர் கட்சியும் செயற்பட்டு வருகின்றனர். அதேவேளை இங்கிலாந்துக்கு 502 பேரைக் கொண்ட பிரித்தானிய வெஸ்ட் மினிஸ்டர்ப் பாராளமன்றத்தில் 30 பிரதிநிதிகள் மட்டுமே வேல்ஸ்கு உண்டு. இது இங்கிலாந்தின் மேலாதிக்கம் வேல்ஸின் மேல் அதிக அளவில் ஏற்படுவதற்கான தளத்தை அமைகின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற கருத்து வேல்ஸ் தேசிய உணர்வாளர்களிடை உள்ளது. இதனால் வெஸ்ட் மினிஸ்ரர்ப் பாராளுமன்றத்தில் நம்பிக்கையை வளர்க்கக் கூடிய வகையில் 1990களின் பிற்பகுதியில் வேல்ஸ் இஸ்கொட்லாந்து வடஅயர்லாந்துகளுக்கான மாநிலசபைகள் உருவாக்கப்பட்டு அரசியல் பரவலாக்கம் ஒன்றுபட்ட பிரித்தானிய அரசின் கீழ் நடைபெற்றது. இதன் தொடர்ச்சியாகக் கடந்த வருடத்து வேல்ஸ் குடியொப்பத்தை அடுத்து வேல்ஸ் அசராங்கம் உட்லநலம் தொடங்கி போக்குவரத்து வரையிலான 20 பகுதிகளுக்கு வேல்ஸ் சபையே முழுஅளவிலான சட்டங்களை இயற்றுவதற்கான அதிகாரத்தை உருவாக்கிக் கொண்டது. அத்துடன் உத்தியோக பூர்வமான ஆணைக்குழுவொன்று இன்னமும் என்னவென்ன அதிகாரங்கள் வேல்ஸ் அரசாங்கத்திற்கு அதிகாரப்பரவலாக்கல் செய்யப்படல் வேண்டும் என ஆராய்ந்த வருகிறது. இவ்வாறு பலவழிகளில் வெஸ்ட்மினிஸ்ரர்ப் பாராளுமன்றம், வேல்ஸ் மக்களில் போதிய கவனம் செலுத்துவதில்லை என்ற கருத்தை மாற்றப் பிரித்தானிய அரசாங்கம் பலவகைகளில் முயன்று வருகிறது. இதனால் வேல்ஸ்க்குச் சுதந்திரம் என்பது தேவையற்ற கோரிக்கை என்று வேல்ஸ் அசெம்பிளியின் முதலமைச்சர் கார்வின் யோண்ஸ் (Carwyn Jones) கூறுகின்றார். கார்டிவ்விற்கும் வெஸ்ட்மினிஸ்ரருக்கும் இடை பாரிய கொள்கை வேறுபாடுகள் சுதந்தரமாகச் செயற்படுத்தப்படுகிறது என்பது வெஸ்ட்மினிஸ்ரர் பாராளமன்ற ஆதரவாளர்களின் கருத்தாக உள்ளது. வேல்ஸ் பாடசாலைகளில் 'சடஸ்' (SATS) தேர்வுகள் இல்லை. ஏழுவயது மட்டும் இத்தாலி பின்லாந்து ஆரம்பக்கல்வி முறையை ஒத்து "விளையாட்டுடன் கூடிய உற்சாகமான ஈடுபாடுகள் மாணவர்களிடை ஊக்கப்படுத்தப்பட்டுப் பயிற்சிப் புத்தகங்களை நிரப்புகிற கல்வி குறைக்கப்படுகிறது". வைத்தியர்கள் எழுதும் மருந்துகள்இலவசமாகவே வேல்ஸில் கொடுபடுவதுடன் அன்ரூலான்சிலியின் சந்தையை மையப்படுத்திய உடல் நலச் சேவை மாற்றங்கள் வேல்ஸில் அனுமதிக்கப்படவில்லை. இலண்டனின் கூட்டரசங்கத்தினர் பல்கலைகழகக் கல்வியாண்டுக் கட்டணத்தை ஒன்பதினாயிரம் பவுண்ஸ்களாக உயர்த்திய பொழுது வேல்ஸ் உயர்த்தப்பட்ட மேலதிகத் தொகையை வேல்ஸில் வதிப்பவர்களுக்கு வேல்ஸின் அரசாங்கமே பொறுப்பேற்றுக் கொண்டது. இவ்வாறாகப் பலவழிகளில் வேல்ஸ் தனியான அரசாங்கத்தைக் கொண்டிருப்பது அனுமதிக்கப்பட்ட நிலையில் வேல்ஸ்க்குச் சுதந்திரம் என்பது அர்த்தமற்ற கூப்பாடு என்பது பிரித்தானிய ஆதரவு வேல்ஸ் தலைவர்களின் கருத்தாக உள்ளது.



ஆனால் வேல்ஸ் தேசியவாதக் கட்சி (**Plaid Cymru AM**) இன் ஆதரவு இவ்வாண்டில் 23 வீதத்தால் அதிகரித்த நிலையில் அதன் தலைவியாக 2004 மார்கழியில் வேல்ஸ் அசெம்பிளியில் மகாராணியைத் 'திருமதி வின்சர்' எனப் பெயர்சொல்லி உரையாற்றியமைக்காக வெளியேற்றப்பட்ட லீனி வுட் (Leanne Wood) வெற்றிபெறலாம் என்ற ஆதரவு நிலையும் வேல்ஸின உணர்வாளர்களின் சுதந்திரக் கோரிக்கை வலுப்பெறும் என்கிற எதிர்பார்ப்பை அரசியல் வட்டாரங்களில் தோற்றுவித்துள்ளது. இதனால் 2014க்கு பின் ஒன்றுபட்ட பிரித்தானியா என்னும் அரசியல் வடிவமைப்பில் வடிவமாற்றங்கள் எதிர்பார்க்கப்படுகிறது. ஆகக் குறைந்தது மரபுவழிப்பட்ட அரசியலமைப்பு என்னும் நிலை மாறி எழுதப்பட்ட அரசியலமைப்பு அதுவும் வேல்ஸ் வடஅயர்லாந்து இங்கிலாந்தின் தேசிய தன்னாட்சித்தன்மைகள் ஏற்கப்பட்ட நிலையே ஒன்றுபட்ட பிரித்தானிய அரசு என்பதை நிலைநிறுத்தற்கான இறுதி வழி என்கிற கருத்து அரசியல்வட்டாரங்களில் நிலவுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2.6 மில்லியன் குழந்தைகள் இறப்பு
# 450 மில்லியன் மூளை உடல் வளர்ச்சியால் பாதிப்புறலாம்



விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி பெற்ற இன்றைய உலகில் கடந்த ஆண்டில் 2.6மில்லியன் குழந்தைகள் போதிய ஊட்டச்சத்தின்றி இறந்துள்ளன. அத்துடன் உடனே வேகமான நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால் அடுத்த பதினைந்து ஆண்டுகளில் 450 மில்லியன் குழந்தைகள் போதிய மூளை மற்றும் உடல் வளர்ச்சிகளைப் பெறாதவர்களாக இருப்பர். இத்தகவலை வறுமையில் இருந்து விடுதலைபெற்ற வாழ்வு என்னும் தருமநிதியப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மணித்தியாலமும் 300 குழந்தைகள் ஊட்டச்சத்து இன்மையால் உயிரிழந்து கொண்டிருக்கும் யதார்த்த உலகில் நாம் வாழ்கின்றோம் என்பதையும் இவ்வாய்வு சுட்டிக்காட்டியுள்ளது.

வளர்முக நாடுகளில் நான்கு சிறுவர்களுக்கு ஒருவர் என்ற வீதத்தில் ஊட்டச்சத்தின்மையால் தாக்கப்பட்டுள்ளனர் சில நாடுகளில் மூன்று சிறுவர்களுக்கு ஒருவர் என்ற வீதத்தில் சிறுவர்கள் ஊட்டச்சத்தின்மையால் பாதிக்கப்படுகின்றனர் நைஜிரியா தன்சானியா போன்ற நாடுகளின் உயர் சனத்தொகைப் பெருக்கம் இந்நாடுகளில் ஊட்டச்சத்தில்லாத குழந்தைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தொகையையும் அதிகரிக்க வைத்து வருகிறது. இந்தியாவில் 48வீதமான ஏழைக்குழந்தைகள் ஊட்டச்சத்தின்மையால் வாடுகின்றார்கள் எனவும் இப்புள்ளிவிபரத்திரட்டு சுட்டிக் காட்டியுள்ளது.

மேலும் ஐ நா வின் உலக உணவுத்திட்ட அறிக்கையின் படி 2050ல் உலக வெப்பநிலை மாற்றங்கள் காரணமாக மேலும் 24 மில்லியன் குழந்தைகள் போதிய உணவின்றி தவிக்கப்போகின்றார்கள் என எச்சரிக்கிறது.

வளர்முகநாடுகளில் வாழும் பெற்றோர்களில் கால் பில்லியன் பெற்றோர்கள் ஏற்கனவே தங்கள் குழந்தைகளுக்கு கொடுக்கும் உணவை ஒரு நேரமாகக் குறைத்துள்ளனர் எனவும் அந்த உணவும் கூட ஏதாயினும் மலிந்த உணவாக ஊட்டச்சத்து இல்லாத உணவாகவே உள்ளது எனவும் இவ்அறிக்கை கவலை தெரிவித்துள்ளது. வறுமையால் வாடும் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை மிக இளவயதிலேயே வேலைக்கு அனுப்புகின்றார்கள் எனவும் இதனால் அறியாமையும் அக்குழந்தைகளிடை அதிகரித்து வருகிறது எனவும் இவ்வறிக்கை மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. ஊட்டச்சத்தின்மை நாடுகளின் தேசிய பொருளாதார வளர்ச்சியிலும் 2 முதல் 3 வீத பொருளாதார வீழ்ச்சியை ஏற்படுத்துகின்றன எனவும் இதனால் 2010ல் உலகின் கூட்டு மொத்தமான பொருளாதாரத்தில் 70 பில்லியன் டொலர்கள் இழப்பு ஏற்பட்டுள்ளன எனவும் இவ்வறிக்கை மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

ஆயினும் தங்களது முதலாவது பிறந்தநாளைக் கூட சந்திக்க இயலாது இறக்கின்ற குழந்தைகளின் தொகை உலகில் 1990களில் 12 மில்லியன்களாக இருந்து 2011ல் 7புள்ளி6 மில்லியன்களாகக் குறைவடைந்துள்ளமை சிறிதளவு மகிழ்ச்சி தரும் செய்தியாக உள்ளது 2015ம் ஆண்டுக்குள் 250 மில்லியன் குழந்தைகளுக்கு நோய்த்தடுப்பு மருந்துகள் ஊசிகள் போடப்படல் வேண்டும் என்னும் உலகத்தலைவர்களின் உறுதிப்பாட்டைப் பாராட்டி உள்ள அறிக்கை 40 வளர்முக நாடுகளில் 3புள்ளி5 உடல்நல வேலையாட்களை நியமிக்க எடுத்துள்ள முடிவையும் வரவேற்றுள்ளது.

மேலும், 2012ல் பிரித்தானியாவில் ஒலிம்பிக் போட்டிகளுக்கு வருகைதரும் உலகத்தலைவர்களை மையப்படுத்தி உலக பட்டினி ஒழிப்பு மாநாடு ஒன்றை பிரித்தானியா நடாத்த வேண்டும் எனப் பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரோனை இவ்அறிக்கை கோரியுள்ளது.



"எழுமின் விழிமின் விரைந்தே வறுமை ஒழிமின்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வார இறுதி நாட்களில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுவர்கள் அதிக அளவில் இறக்கின்றனர்!



2009ம் ஆண்டு ஏப்ரல் முதல் 2010ம் ஆண்டு மார்ச் மாதத்திற்கு இடையில் இங்கிலாந்தின் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்ட 1.4 மில்லியன் மக்களின் தரவுகளிடை நடாத்திய ஆய்வில் வார இறுதி நாட்களில் அனுமதிக்கப்பட்டவர்கள் வாரநாட்களில் அனுமதிக்கப் பட்டவர்களை விட இறப்பில் 16 வீதம் அதிக ஆபத்தைக் கொண்டிருந்தமை கண்டு அறியப்பட்டுள்ளது. அதிலும் பக்கவாதத்தால் தாக்கப்படுபவர்கள் வார இறுதி நாட்களில் அனுமதிக்கப்படுகையில் இறக்கும் அபாயம் வாரநாட்களில் அனுமதிக்கப்படுபவர்கபளை விட 20 வீதம் அதிகமாக இருக்கிறது எனவும் இந்த ஆய்வு எச்சரித்துள்ளது. சனிக்கிழமைகளில் அனுமிக்கப்பட்டவர்களில் 11வீதமானவர்கள் பெரும்பாலும் இறந்துள்ளமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. போதிய அனுபவமுள்ள வைத்தியர்கள் இல்லாத நிலையில் வாரஇறுதிநாட்களில் கடமையாற்றும் வைத்தியர்கள் எடுக்கும் முடிவுகளாலேயே இத்தகைய நிலை ஏற்படுகிறது என்பதை விளக்கியுள்ள இவ்வாய்வு போதிய வைத்தியர்கள் கடமையாற்றியிருப்பின் ஆகக்குறைந்தது 500 நோயாளிகளின் உயிரையாவது காப்பாற்றியிருக்க முடியும் என்றும் தெரிவித்துள்ளது.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த மருத்துவ வேலையாட்கள் சக்திகள் இயக்குனர் வைத்தியக் கலாநிதி அன்ரூ கொடாட் "அதிக அளவான நோயாளிகளும் குறைந்த அளவான வைத்தியர்களும் வாரஇறுதி நாட்களில் காணப்படுவதே இந்த நிலைமைக்குக் காரணம் எனக் கூறி ஒவ்வொரு நாளும் ஆகக்குறைந்தது 12 மணித்தியாலங்கள் என்கிலும் ஆலோசனை வழங்கு வைத்தியநிபுணர் ஒருவர் வைத்தியசாலைகளில் பணியாற்றுதல் உறுதி செய்யப்படல் வேண்டும் எனக் கோரியுள்ளார். தேசிய உடல்நல சேவைகள் ஒன்றியத்தின் தலைவர் டேவிட் இஸ்ரூவர்ட் நோயாளி அனுமதிக்கப்படும் நேரத்திலோ அல்லது நாளிலோ தங்காமல் எந்நேரத்திலும் எந்நாளிலும் முழுத்திறமையுடன் வைத்தியசாலைகள் செயற்படக்கூடிய முறையில் அரசாங்கம் உடல்நலசேவைகள் குறித்த திட்டமிடல்களையும் நிதிஒதுக்கீடுகளையும் செய்து நோயாளிகள் பாராமரிப்பில் அதிக அக்கறை உடன் காட்ட வேண்டுமென்பதை இந்த ஆய்வு சுட்டிக்காட்டுகிறது எனக் கருத்துத் தெரிவித்துள்ளார். நோயாளிகள் சங்கத்தின் மேலதிகாரி கத்தரின் மேர்பி இருபத்திநாலு மணிநேரமும் ஏழுநாட்களும் உடல்நலசேவைகள் முழுஅளவிலான சேவைகளை வழங்குவதை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும் என்பதையே இந்த ஆய்வு வலியுறுத்துகிறது என்று கூறியுள்ளார். பிரித்தானிய அரசாங்கம் சந்தை நோக்கில் உடல்நலசேவைகளையும் அணுகும் போக்கு பிரித்தானியாவில் உள்ள வைத்தியர்கள் தாதிமார் வைத்தியத் தொழில்நுட்பவியலாளர்கள் நோயாளிகள் இடை பெரும் அதிருப்தியை ஏற்படுத்தி வருகின்றது. புதிய உடல்நலசேவைகள் மாற்றங்கள் பிரித்தானியாவில் அவசர சிகிச்சைகள் பெறுவோர்மற்றும் நீண்ட கால நோயாளிகள் ஆகியோரை சேவைகளை வழங்குதிலும் பெறுவதிலும் கடுமையாகப் பாதித்துவருவது குறிப்பிடத் தக்கது.

**"நீரைச் சுருக்கி மோரைப் பெருக்கி நெய்யை உருக்கி உண்க"**

**தேரையார். பத்தாம் நூற்றாண்டுத் தமிழ் அறுவை வைத்திய நிபுணர்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இசைக்கலைஞனின் இறைஉணர்வின் உந்தல்
# புனித மரியாள் பேராலய புனர்நிர்மாண
# திருப்பணி நிதிக்கான நிகழ்ச்சி





இலண்டனில் வாழும் இசைக்கலைஞர் நிகால் பங்கிரேசியஸ் அவர்கள் யாழ் புனித மரியாள் பேராலயத்தின் புனர்நிர்மாண நிதிக்காக 2012 மார்ச் 3ம் திகதி இரவு 7 மணிக்கு, Wallington Hall,3A Stafford, Wallington,Surrey, SM6 9AQ இல் இசைமாலை ஒன்றில் இணையுமாறு அழைத்துள்ளார். அவருடைய தொடர்பு இலக்கம் 02086402947, மின் அஞ்சல் முகவரி nihalpancratius@yahoo.com.

யாழ் சென் பற்றிக்ஸ் கல்லூரிக்கு அருகில் உள்ள யாழ்நகரின் மிக உயரமான வட்டக் கோபுரத்தைக் கொண்ட இப்பேராலயம் போர்க்காலத்தின் குண்டுவீச்சுக்கள் எறிகணைத்தாக்குதலுக்கு முகங்கொடுத்து உறுதியுடன் நின்ற போதிலும் கட்டுமானப் புனரமைப்பு உடன் செய்யப்படுதல் அவசியமாக உள்ளதால் பேராலயம் புனரமைக்கப்பட்டு வருகிறது. அருட்தந்தை சகாயநாயகம் அவர்கள் பங்குத் தந்தையாக இருந்து இவ்வாலயத் திருப்பணியைத் தொடங்கியுள்ளார். இதுவே யாழ்மறைமாவட்ட ஆயரின் தலைமைஆலயம் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகைப் பகை

## பிரித்தானியாவில் ஆசியவீடுகளில் கொள்ளைகள் அதிகரிப்பு



## வாழ்வுக்கு ஆதாரமாக வேண்டிய செல்வமே வாழ்வை அழிக்கும் அவலநிலை

உலோகங்களை அடையாளம் காட்டும் நவீனஉபகரணங்கள் கொண்டு ஆசிய வீடுகளுக்குள் புகும் திருடர்கள் ஆசிய மக்கள் சேமித்து வைத்திருக்கும் நகைகளைக் கொள்ளையிடுதல் பிரித்தானியாவில் என்றுமில்லாத அளவுக்கு அதிகரித்துள்ளது என்று ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

"எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு போய்விட்டார்களே" என்று அங்கலாய்க்கும் உள்ளத்தவராகக் களவு கொடுத்த ஆசிய மக்கள் தவிப்பதாகக் கூறும் ஊடகங்கள் ஆசிய மக்கள் வீடுகளில் நகைகளை வைத்திருப்பதே திருடர்கள் ஆசிய மக்களின் வீடுகளை இலக்கு வைப்பதற்கான காரணமாகிறது எனவும் எச்சரித்துள்ளன. வங்கிகளில் வைப்பு இருப்புக்களில் நகைகளைப் பாதுகாப்பாக வைப்பதே உகந்தது எனவும் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

ரெடிங் நகருக்கு அருகில் உள்ள பாக்கிஸ்தானைச் சேர்ந்த வீடொன்றில் 70000 பவுண்ஸ் பெறுமதழயான நகை திருட்டுப்போனமை குறித்து வெளியான செய்திகளே ஆசிய மக்கள் பெருமளவில் நகைகளை வீட்டில் வைத்திருப்பதினால் ஏற்படும் விளைவுகள் குறித்த சிந்தனைகளைப் பிரித்தானிய ஊடகங்களில் தோற்றுவித்துள்ளன.

தமிழர்கள் வீடுகளிலும் வீடுடைத்து நடைபெறும் திருட்டுக்கள் அதிகளவில் நடைபெற்றுள்ளன. வீட்டில் எதையுமே கிண்டிக் கிளறாது நகைகளும் பணங்களும் இருக்கும் இடங்கள் கண்டறியப்பட்டுத் திருடப்பட்ட சம்பவங்களே அதிகமாக உள்ளது. சில வீடுகளில் இரும்புச் சேமிப்புப் பெட்டிகள் கூட அப்படியே தூக்கிச் செல்லப்பட்டுள்ளன.

அதே வேளை ஆசிய இனத்தவர்களின் வீடுகளில் நடைபெறும் இத்திருட்டுக்கள் குறித்த செய்திகள் வெளியாகும் பொழுது ஆசிய மக்கள் வீடுகளில் செல்வத்தை அதிகஅளவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதுக்கி வைத்து வருமானவரிக்கு ஏய்ப்புச் செய்து அரச நலஉதவிகளைப் பெறுகின்றார்கள் என்ற கருத்தும் இனவெறியை வளர்ப்பவர்கள் பக்கத்தில் இருந்து மக்களிடை பரப்பப்படுகிறது. ஆசிய மக்கள் பெருந்தொகையில் நகைகளை வேண்டுவதற்கான பணம் எவ்விதம் உழைக்கப்படுகிறது என்கிற கேள்விகளும் எழுப்பப்படுகின்றன.

இதனால் வேலைகிடைக்காது அல்லது வேலைக்குப் போவதற்கு உடல்நலமின்றி வாழும் பெருந்தொகையான ஆசிய மக்களுக்கு அரசநலஉதவிகள் வழங்கப்படுகையில் பலத்த சந்தேகங்களும் எழுப்பப்படுகின்றன. பெரும்பாலான சாதாரண ஆசியப் பெண்கள் தாங்கள் பிரித்தானியாவிற்கு வரும்பொழுதே தங்களின் பரம்பரைச் சொத்தாகவே நகைகளைக் கொண்டுவந்தனர் என்பது முக்கியமான விடயம். இங்கு அவர்கள் தாங்கள் கொண்டு வந்த நகைகளையே பேணுகின்றனர் என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.



கூறையும் சைவர்கள் கிறிஸ்தவர்களின் தாலிகளும்

அத்துடன் தாலி போன்ற நகைகள் திரவத்தன்மையுடைய சொத்துக்கள் அல்ல கலாச்சார அடையாளங்களாக அல்லது குடும்பநினைவுகளாகப் பாதுகாக்கப்படுவன. திருமணத்தன்று உடுத்திய கூறையும் தாலியும் பெண் வாழ்நாள் முழுவதும் தன்னுடன் பேணுகின்ற பொருட்கள். சைவவைண மக்கள் மட்டுமல்ல கிறிஸ்தவத் தமிழ் மக்களும் கூட தாலியை வாழ்நாள் முழுவதும் பேணும் மரபையே கொண்டுள்ளனர். இந்தக் கலாச்சாரத்தன்மையைப் புரிந்து சாதாரண ஆசிய மக்களுக்குச் சமுகநல உதவிகள் வரையறை செய்யப்பட வேண்டும் என்று ஆசிய ஆய்வாளர்கள் சமுதாயக்கொள்கை வகுப்பாளர்களுக்குச் சுட்டிக்காட்டி வருகின்றனர்.

எது எப்படியிருப்பினும் சாதியமும் சீதனமும் ஆசிய சமுதாயத்தில் ஏற்படுத்தும் தாக்கங்களின் வரிசையிலேயே இந்த நகைப்பித்து என்பதும் எடுத்து நோக்கப்பட வேண்டிய ஒன்றாக அமைகிறது. அதாவது குறுக்கு வழியில் சமுக மதிப்பைப் பெறுதல் என்கிற அடிமைத்தனச் சிந்தனையின் விளைவுகளாகவே இவை ஆசிய மக்களிடை பலவித சிக்கல்களைத் தோற்றுவிக்கின்றன. பொன்னகையை விடப் பெண்ணின் புன்னகையின் மதிப்பு கோடான கோடி என்பதை ஆசிய மக்கள் மறந்து விட்டதின் பயன்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் உலகப் பொதுமொழியாகுமா?
## தமிழ்க் கலாசாரப் பாதுகாப்பு சர்வதேச மாநாடு

ஜனவரி 7, 2012

" சென்றிடுவோம் எட்டுத்திக்கும். தமிழை உலகப் பொதுமொழியாக்கிடுவோம் " என்னும் முழகத்துடன் தமிழ்க் கலாச்சாரப் பாதுகாப்பு சர்வதேச மாநாடு திருச்சி கலைக் காவிரி நுண்கலைக் கல்லூரியில் நடைபெற்றது.

திருச்சிராப்பள்ளித் தமிழ்த் தொன்மை மையம் ஏற்பாடு செய்திருந்த இந்த மாநாட்டின் அழைப்பிதழில் ஒரு புதுமை– மாநாட்டின் குறிக்கோள் அழைப்பிதழில் தெளிவுபடுத்தப்பட்டிருந்தது.

" உலக மயச் சூழல், பன்னாட்டுத் தொடர்புகள் நுகர்வுக் கலாச்சாரம்– நமது தமிழ் மொழியை வெகுவாகப் பாதித்து பேச்சு மற்றும் எழுத்து வழக்கிலிருந்து படிப்படியாகத் தமிழ் மறைந்து போகும் நிலைமையை உருவாக்கிவிட்டன.

தமிழ் மொழி ஆங்கில ஆக்கிரமிப்புக்கு ஆளாகிவிட்டதோடு, தமிழர்களின் புராதனப் பண்பாடுகளும், வாழ்வியல் நெறிகளும், பாரம்பரியக் கலைகளும் சிதைந்து போகும் ஆபத்து நேரிட்டிருக்கிறது.

இந்தச் சூழலில் தமிழ் மொழியையும், மொழி சார்ந்த நமது பண்பாடுகளையும் பாதுகாப்பது எப்படி என்பதை ஆராய்ந்து செயல் திட்டங்களை வகுத்திட இம்மாநாடு திட்டமிட்டிருக்கிறது..

தமிழ் மொழிக்கு வளம் சேர்க்கவும், தமிழ் மொழியும் தமிழர்களும் எதிர்கொண்டிருக்கும் அந்நியக் கலாச்சாரத் தாக்குதலிலிருந்து தமிழ்க் கலாச்சாரத்தைப் பாதுகாத்திடவும், ஒருங்கிணைந்த தொடர் நடவடிக்கைகளை இந்த மாநாடு உருவாக்கித் தரும்.

உயர் கல்வி, தகவல் தொழில் நுட்பம், வேலை வாய்ப்புகள் என ஆங்கிலப் பாதையில் தமிழ்மொழி தடுக்கிவிழுந்த அதே காரணங்களை ஆயுதமாக்கி தமிழ் மொழி மூலமே இவை சாத்தியமாகும் என நிரூபிக்கத் திட்டமிடுவோம்," என்பதுதான் இந்த மாநாட்டின் இலக்கு.

மாநாட்டு அரங்கத்திற்கு "மக்கள் எழுத்தாளர் விந்தன் நினைவு அரங்கம் " எனப் பெயரிடப்பட்டிருந்தது. கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி மாணவிகள் வரவேற்பு நடனத்துடன் மாநாட்டின் நிகழ்ச்சிகள் துவங்கின.

தமிழ்த் தொன்மை மையத்தின் தலைவர், முனைவர் பேராசிரியர் சோ. சத்தியசீலன் மாநாட்டுக்குத் தலைமை வகித்துப் பேசினார். " தமிழ் மொழியை வளர்க்கவும், நமது புராதனப் பண்பாடுகளைப் பாதுகாத்திடவும், அவற்றை உலகப் பொதுமறையாக்கிப் பரப்பிடவும் " சென்றிடுவோம் எட்டு திக்கும்" என்னும் பாரதியின் கட்டளையையே இம்மாநாடு வேதமாக ஏற்றுக் கொண்டிருக்கிறது. தமிழ்ப் பண்பாடுகளைப் பாதுகாப்பதற்கான ஒரு சிறு விதையை இங்கு விதைத்திருக்கிறோம். திருச்சியில் முளை விடும் இந்தக் கலாச்சாரச் செடி விரைவில் மரமாகி, கனிதந்து, அந்த விதைகள் உலகெங்கும் பரவி தமிழை உலகப் பொது மொழியாக்கவும், நமது பண்பாடுகளை உலகப் பண்பாடுகளாகவும் வளர்க்கும் என்று நம்புவோம்" என்று சோ. சத்தியசீலன் தனது உரையில் குறிப்பிட்டார்.

கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரியின் இயக்குநர் மற்றும் செயலாளரான அருட் தந்தை எல். அந்துவான் தமிழ்க் கலாச்சாரப் பாதுகாப்பு மாநாட்டினை துவக்கி வைத்துப் பேசினார். "இத்தகைய ஒரு மாநாடு இங்கு நடைபெறுவது எங்கள் கல்லூரிக்கும் திருச்சி நகரத்திற்கும் பெருமை. தமிழின் பெயரால் மதங்களையும், மனங்களையும் இணைத்து நமது பண்பாட்டிற்குப் பெருமை சேர்த்திருக்கிறது இம்மாநாடு" என்று தந்தை எல். அந்துவான் மகிழ்ச்சி தெரிவித்தார்.

மாநாட்டின் ஒருங்கிணைப்பாளர் வை. ஜவஹர் ஆறுமுகம் அனைவரையும் வரவேற்றார். " தமிழ் மொழிக்கும் கலாச்சாரத்திற்கும் நெருக்கடிகள் தோன்றியிருப்பது உண்மைதான். சீரழிவுகளுக்குக் காரணமான உலக மய சூழல்களைப் பயன்படுத்தியே தமிழையும், நமது பண்பாடுகளையும் பாதுகாத்திட முடியும். எல்லாவிதமான சவால்களையும் எதிர்கொண்டு நிலைத்து நிற்கும் ஆற்றல் தமிழுக்கு உண்டு. ஆங்கிலத்தால் உலகை ஆக்கிரமிக்க முடியுமென்றால் வளம் மிகுந்த தமிழுக்கும் உலகை ஆக்கிரமிக்கும் சக்தி உண்டு.

எல்லாவிதமான அந்நியப் பண்பாடுகளையும் உள்வாங்கிக் கொண்டு தமிழ் தனித் தன்மையுடன் உலகை வலம் வரும். இந்தியாவை உலக நாடுகளின் சந்தையாக்கும் முயற்சியைத் தடுத்து உலகையே இந்தியாவின் சந்தையாக்கும் நாள் வரவேண்டும். அப்போது தமிழ் உலகின் பொது மொழியாக அங்கீகரிக்கப்படும்," என்று ஜவஹர் ஆறுமுகம் நம்பிக்கை தெரிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தாளர் பிரேமா நந்தகுமார் தலைமையில் நடைபெற்ற ஆய்வரங்கில் கோவை ஞானி, பிரான்ஸ் அரவிந்த் அப்பாத்துரை, கலைக்காவிரி நுண்கலைக்கல்லூரி முதல்வர் மார்கரெட் பாஸ்டின், கோவை பேராசிரியர் இரா. செல்வி ஆகியோர் பேசினார்கள். திருக்குறள் சு. முருகானந்தம் ஆய்வரங்கை நெறிப்படுத்தினார்.

பிற்பகல் முனைவர் ஜோதி இராமகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற ஆய்வரங்க இரண்டாம் அமர்வில் ஜெர்மனில் வாழும் அகிலேஷ்வரன், சு. முருகானந்தம், கவிஞர் ரத்திகா, துபாய் அல் ஹாஜி சையத் அப்துல் காதர் ஆகியோர் பங்கேற்றுப் பேசினார்கள்.

இந்த மாநாட்டில் பேசிய ஜெர்மனியில் இருக்கும் அகிலேஷ்வரன் பேசுகையில், "ஜெர்மனியில் இருக்கும் முக்கிய தொழில் நிறுவனம் இந்தியாவுக்கு இடம் மாறப் போகிறது. தமிழ் மொழி பேசும் நிறைய தமிழர்கள் அதிலே இருப்பார்கள். நாம் சரி என்று நினைத்துக் கொண்டு சிலவற்றை தவறாகச் செய்கிறோம். ஜெர்மன் நாட்டு இளம் பெண்களும், மாணவர்களும் இப்போது தமிழ் பேசுகிறார்கள். தமிழன் ஒரு ஜெர்மன் பெண்ணை மணந்து கொண்டு தமிழை சொல்லிக் கொடுத்தான். புலம்பெயர் நாடுகளில் தமிழ் அழியவில்லை. ஆக்கிரமிப்பு செய்து வருகிறது." என்று குறிப்பிட்டார்.

அருட் தந்தை அமுதன் அடிகள் தலைமையில் நடைபெற்ற மாநாட்டின் நிறைவு விழாவில் பேராசிரியர் ச. முத்துக்குமரன் (முன்னாள் துணை வேந்தர்) 'அமுதசுரபி' ஆசிரியர் திருப்பூர் கிருஷ்ணன், இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் ஆகியோர் பங்கேற்றனர்.

'மானாட மயிலாட' போன்ற தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் நமது கலாச்சாரத்தைச் சீரழிக்கின்றன. இதில் அரைகுறை ஆடைகளுடன் நன்றாக ஆடுகிற பெண்களுக்குப் பரிசு கிடைக்கிறது. தோற்ற பெண்ணின் தாயார் தன் மகள் ஆடி வெற்றி பெறவில்லையே என்று கண்ணீர் விட்டு அழுவதையும் காட்டுகிறார்கள். வடமொழியைத் தவிர்க்க வேண்டும் என்பதற்காக ஜ,ஷ,ஹ,ஸ போன்ற எழுத்துக்களை ஒதுக்கத் தேவையில்லை. அந்த ஓசையைத் தரக்கூடிய வேறு எழுத்துக்கள் தமிழ் மொழியில் இல்லை. தேவையானதை ஏற்றுக் கொள்வதே நமது முன்னோர் காட்டிய பண்பாடு," என்று திருப்பூர் கிருஷ்ணன் பேசுகையில் குறிப்பிட்டார்.

தமிழ்க் கலாச்சாரப் பாதுகாப்பு சர்வதேச மாநாட்டின் இறுதியில் சிறப்புரையாற்றிய குமரி அனந்தன், "சென்றிடுவோம் எட்டு திக்கும் என்னும் பாரதியின் வார்த்தைகளில் நம்மையும் இணைத்திருக்கிறார்கள். தமிழை உலகப் பொதுமொழியாக்கிகிடும் பயணத்தில் சென்றிடுவோம் எட்டுதிக்கும்.

பிரிட்டிஷ் நூலகத்தில் நமது புராதன ஓலைச்சுவடிகள் 170 இன்னும் இருக்கின்றன. தமிழ் உலகெங்கும் பரவியிருக்கிறது. உலகப் பொதுமொழியாகும் தகுதி தமிழுக்குத்தான் உண்டு. ஐரோப்பிய அடிப்படையில் வந்த மொழியை விட்டு அனைத்து மொழிகளுக்கும் வேர்மொழியாக இருக்கும் தமிழை உலகின் பொதுமொழியாக அறிவிக்க வேண்டும். என 1992 ஜூன் 25–ந் தேதியன்று ஐ.நா.வின் யுனெஸ்கோவுக்கு கடிதம் எழுதினேன். 30 நாட்களுக்குள் அதற்குப் பதில் வந்தது. ஐ.நா. பொதுக்குழுவில் அதன் உறுப்பினர் நாடுகள் தீர்மானம் கொண்டு வந்தால்தான் அது சாத்தியமாகும் என யுனெஸ்கோ கூறியிருந்தது. அதற்குப் பிறகு அந்த மாதிரி ஒரு தீர்மானத்தை ஐ.நா. பொதுக்குழுவில் கொண்டு வருமாறு இன்றுவரையுள்ள பல பிரதமர்களுக்கும் கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறேன்.

திருக்குறளே உலகப் பொது நூல். 196 நாடுகளில் நமது நூல்கள் போகும்போது தமிழே உலகின் பொதுமொழியாக இருக்கும். அணுமுதல் அகிலம் வரை, ஆண்டவனையும் உள்ளடக்கிய மொழி தமிழாகும்," என்று கூறினார்.

தமிழ்க் கலாச்சார மேம்பாட்டுக்காக அரும்பணியாற்றிவரும் எழுத்தாளர் கோவை ஞானி, இலங்கை கலைஞர் கலைச் செல்வன், 'திசை எட்டும்' குறிஞ்சி வேலன், 'கார்முகில்' முத்துவேலழகன், தொல்லியல் ஆய்வாளர் டி.கே.வி.ராஜன் ஆகியோருக்கு "செம்மொழித் தமிழ்த் தென்றல்" என்னும் விருதினை வழங்கி இம்மாநாடு கௌரவித்தது.

தமிழ்க் கலாச்சாரத்தைப் பாதுகாக்கவும், வளர்க்கவும் உதவும் வகையில் பள்ளி மற்றும் கல்லூரிகளில் கலாச்சாரக் கல்வியையும், நீதிபோதனையையும் பாடத்திட்டத்தில் சேர்த்திட வேண்டும் எனவும், இயல், இசை, நாட்டியம் மற்றும் நாட்டுப் புறக் கலைகள் வழியாகத் தமிழ்க் கலாச்சாரத்தை உலகெங்கும் பரப்பிட தனி அமைப்பு ஒன்றை நிறுவிட வேண்டுமென்றும் தமிழக அரசைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானங்களை இம்மாநாடு நிறைவேற்றியது.

உலகத் தமிழ்க் கலாச்சார மையம் ஒன்றை லண்டனில் நிறுவவும், உயர் கல்வி, தகவல் தொழில் நுட்பம், வேலை வாய்ப்புகளைத் தமிழ் மொழியின் மூலமே சாத்தியமாக்கிட முடியும் என்பதை நிரூபித்திடத் தேவையான செயல் திட்டங்களை வகுத்திட லண்டன் டாக்டர் ரத்னம் நித்யானந்தன் தலைமையில் ஒரு வல்லுனர் குழுவினை அமைத்திடவும் இம்மாநாடு தீர்மானித்துள்ளது.

செய்தித் தொகுப்பு: **வை. ஜவஹர் ஆறுமுகம்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருச்சி கலைக்காவேரி நுண்கலைகழகத்தில் 'மக்கள் எழுத்தாளர் விந்தன்' நினைவு அரங்கில் இடம்பெற்ற தமிழ்க்கலாச்சார பாதுகாப்பு மகாநாட்டில் ஒரு காட்சி. இம்மாநாடு நடைபெறுவதற்கு திருச்சியின் மூத்த எழுத்தாளர் ஜவஹர் ஆறுமுகம் மிகவும் கடினமாக உழைத்தமை குறிப்பிடத்தக்கது.

## விடை தெரிந்தவர்கள் கையை உயர்த்துங்கள்!

## வாசித்தலையும் கணித்தலையும் விரைவுபடுத்துகிறது




'விடை தெரிந்தவர்கள் கையை உயர்த்துங்கள்' என்று படிப்பிப்பது ஆசிரியர்களுக்கு வகுப்பைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதில் சிரமங்களை ஏற்படுத்தினாலும் அவ்வாறு படிபிக்கப்படாத மாணவர்களை விட வாசிப்பு மற்றும் கணித ஆற்றலை ஒன்பது மாதங்கள் முன்னோக்கி வளரச் செய்கிறது என துர்காம் பல்கலைகழக ஆய்வுகள் சுட்டிக்காட்டி உள்ளன. பிரித்தானியாவில் 500 பாடசாலைகளில் படிக்கும் நாலு ஐந்து வயதுள்ள 12000 சிறுவ சிறுமியர்களிடை கணினி மூலம் அவர்களின் ஓராண்டுப் பெறுபேறுகள் தொகுக்கப்பட்டு வகுக்கப்பட்டு அடிப்படயிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டதென இந்த ஆய்வுக்குத் தலைமைதாங்கிய துர்காம் பல்கலைகழக கல்வித்துறைப் பேராசிரியர் தெரிவித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திரசூரிய உச்சப்பலன் நிறைநாளில் தமிழ்க்கடவுள் முருகனின் விழாவாகத் தைப்பூசம்







காலச்சுழற்சி சூரியசந்திரரின் நகர்வில் என்றதை அன்றே உணர்ந்தவர்கள் நம்முன்னோர். தைமாதப்பிறப்பு சூரியன் மகரராசியில் மீளவும் நுழையும் நாள் என்று தைத்திருநாள் கண்டனர். பொங்கலிட்டு ஊர்கூடி உண்டு மகிழ்ந்து கலைகள் கண்டு உயிர்கள் பேணி உயர்ந்தனர். சந்திரன் கடகராசியில் நுழையும் நாள் தைமாதத்திற்கு உரிய உச்சபலத்துடன் சந்திரன் திகழும் நாள் என்பதன் அடிப்படையில் அன்று பூசநட்சத்திரமும் வானில் காணப்படுவதால் அன்றைய தினத்தைத் தைப்பூச நன்னாள் என்று கொண்டாடினார். சைவத்தில் சிவனின் அம்சமாகச் சூரியனையும் சக்தியின் அம்சமாகச் சந்திரனையும் கருதி இறைவனையும் இறைவியையும் போற்றும் மரபு உண்டு. அந்த வகையில் தைமாதப்பிறப்புக்கு முன்னர் மார்கழித்திருவாதிரை நன்னாளில் சிவன் ஆனந்த தாண்டவம் புரிந்தார் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் ஆருத்திரா தரிசனம் கண்டவர் தமிழர். பின்னர் தைப்பூசத்தன்று சந்திரன் சக்தியின் அம்சம் என்ற வகையில் அன்று சக்தி மகிழச் சிவனும் சக்தியும் இணைந்து தாண்டவமாடினர் என்ற நம்பிக்கை பிறந்தது.

அது மட்டுமல்ல சிவனின் அதோமுகம் கருணைமுகம் என்று சொல்லப்படும் ஆறுமுகக்கடவுளுக்கு சக்தி வேல் கொடுத்த தினமாகவும் முருகவழிபாட்டில் தைப்பூசத்திற்கு விளக்கம் கொண்டனர் தமிழர். இதனால் தைப்பூசத்தன்று தீமை அழிந்திட தர்மம் நிலைத்திடச் சூரனை வதம் செய்ய வீரவேலினை சக்தி தன் ஆற்றல் எல்லாவற்றையும் குவித்த ஆயதமாகப் பிள்ளையின் கரத்தில் கொடுத்தாள் என்கிற மரபு தோன்றியது. இதனால் அன்றையத் தினம் முருகனடியார்கள் காவடி எடுத்தும் பெண்கள் பாற்குடம் சுமந்தும் முருகனின் தைப்பூசத்திருநாளாகத் தைப்பூசத்தைப் பெருவிழாவாக்கினர். அதிலும் சிறப்பாகத் தண்டாயுதபாணியாகப் பழனியில் வந்தமர் திருமுருகனின் சந்நிதியில் தைப்பூசத் திருவிழா, பக்தர்கள் காவடிகள் சுமந்து வரப் பெண்கள் பாற்குடங்கள் சுமந்து வர நேர்த்தி வைத்தவர்கள் தலைக்கு மொட்டையடித்துச் சந்தனம் பூசி மலைகள் ஏறிவர நாதஇசையும் திருப்புகழும் தீந்தமிழில் பக்தர் முருகனை அழையொலியும் சேர்ந்து ஓசையும் ஒளியுமாக உள்ள இறைவனையே அவ்விடத்தில் மனதால் காணவைக்கும் பெருவிழாவாகக் கொண்டாடப்பட்டுவருகிறது. பக்தர்கள் கொண்டாடும் பழநியில் அருணகிரிநாதருக்குத் திருக்காட்சி நல்கிய முருகன் செபமாலை அளித்தான் என்பது தலப்பெருமைகளில் ஒன்றாக உள்ளது. உலகைக் காக்க வேலும் உயிரைக்காக்கச் செபமாலையும் வழங்கப்பெற்ற அருட்தலமாக இலங்கு பழநியில் பெரியநாயகி அம்மன் கோவிலில் தான் தைப்பூசத் திருவிழாவுக்கான கொடியேற்றப்பட்டு இக்கோயிலின் வீதிகளிலேயே தைப்பூசத்தன்று தேரோட்டமும் நடைபெறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபூதிப் புதன்

# 22.02.2012



### மானிடா நினைவில் வை!
### நீ மண்ணாய் இருக்கிறாய், மீளவும் மண்ணாவாய்!

## உன் பாவங்களை விட்டு விலகி, நற்செய்தியை நம்பு

இயேசுநாதர் சிலுவை மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்தமையை உயிர்ப்புப்பெருவிழா (Easter) எனக் கொண்டாடும் கிறிஸ்தவர்கள் அத்தினத்திற்கு முதல் நாற்பது நாட்களை தபசு காலமாகக் கடைப்பிடித்தல் கிறிஸ்தவ மரபு. இயேசுபெருமான் பொதுவாழ்வைத் தொடங்கு முன்பு பாலைவனத்தில் நாற்பது நாட்கள் தவமிருந்தே தொடங்கினார். இயேசுநாதரின் இனமான யூதஇனத்தில் 'பாஸ்கா'விழாவை 40நாட்கள் தவமிருந்தே கொண்டாடுவர். மோசேஸ் கடவுளை விடுத்து பொன்பசுவை வணங்கிய குற்றம் நீங்க நாற்பது நாட்கள் தவமிருக்கப் பணித்தார். இயேசு பெருமான் பேசிய மொழியாகிய ஹிபுரு மொழியினர் நாற்பது வருடங்கள் தவமிருந்தே தங்களுக்கெனக் கடவுள் கொடுத்த நிலத்தைச் சென்றடைந்தனர் இந்த யூத மற்றும் ஹிபுரு மொழிப்பின்னணியில் இயேசுவும் தமது பொதுவாழ்வைத் தொடங்குமுன்னர் 40 நாட்கள் தவமிருந்து மரபினைப் பேணி வழிகாட்டினார்.

இந்த விபூதிப்புதன் திருப்பலிப்பூசையின் முன்னர் ஒலிவமரக் குருத்தோலைகள் எரிக்கப்பட்ட சாம்பல் ஆசீர்வதிக்கப்பட்ட எண்ணெயுடன் கலக்கப்பட்டு அடியவர்களின் நெற்றியில் குருவினால் பூசப்படும். அந்நேரம் "மானிடா நினைவில் வை! நீ மண்ணாய் இருக்கிறாய். மீளவும் மண்ணாவாய்" என்ற வார்த்தைகள் குருவினால் கூறப்படும். இவ்வாறாக நிலையாமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்த்தப்பட்டு " உன்பாவங்களை விட்டு விலகி நற்செய்தியை நம்பு" என்ற செய்தி மக்களுக்கு நினைவுபடுத்தப்படும்.



**ஆசீர்வதிக்கப்பட்ட எண்ணெயில் குழைக்கப்பட்ட குருத்தோலைச் சாம்பல் உள்ள கிண்ணம்**

தாவீது அரசன் (டேவிட்) யூதஅரசர்களில் மிகுந்த ஞானம் உள்ளவன். ஆயினும் அவன் பலதவறுகளையும் செய்திருந்தான். இதனால் தாவீது அரசன் தன்னுடைய தவறுகளை உணர்ந்து கடவுளின் ஆலயப் பீடம் முன்பாக விழுந்து " எனது இருதயத்தைச் சுத்தப்படுத்தும். என் ஆன்மா புதிய புனிதமான ஆன்மாவாக மாறச் செய்யும். என்னுடைய ஆன்மாவில் உடனுறையும் நீர் என்னை விட்டுப் போய்விடாதேயும். உம்முடைய தூய ஆவியை என்னை விட்டு அகற்றிவிடாதேயும்" என்று ஓலமிட்டார். தன்னுடைய பாவங்களுக்குப் பரிகாரமாக கடும் தவத்தினை மேற்கொண்டார்.



பாவத்திற்கு கூலி மரணம் என்ற யூத நம்பிக்கையை மாற்றியமைக்கும் வார்த்தைகளாக தாவீது அரசனின் "என் ஆன்மா புதிய புனிதமான ஆன்மாவாக மாறச் செய்யும். என்னுடைய ஆன்மாவில் உடனுறையும் நீர் என்னை விட்டுப் போய்விடாதேயும். உம்முடைய தூய ஆவியை என்னை விட்டு அகற்றிவிடாதேயும்" என்னும் வார்த்தைகள் அமைந்தன. இந்த வார்த்தைகள் வாழ்வளிக்கும்படி இறைவனிடம் கேட்கும் இதயத்தின் குரலொலி. ஒன்றுமில்லாமையிலிருந்து என்னை உயிர்பெறச் செய்த இறைவனால் என் பாவத்தளைகளிலிருந்து என்னை விடுவிக்கவும் முடியும். இறைவனே வினைகளையும் அவற்றின் பலன்களையும். நீக்க வல்லவன். இந்த உண்மையை உணர்த்தி வினைவழி வந்த தளைகள் நீங்க அவனருள் வேண்டி அதற்காகத் தவமிருக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துவதே விபூதிப் புதன்.


**"தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்**
**மெய்வருத்தக் கூலி தரும்"**

என்னும் விடாமுயற்சி குறித்த திருக்குறளில் முயற்சி என்பதன் பொருள் 'தவம்'. இதனையே விபூதிப்புதனும் எடுத்துரைக்கிறது. தவம் செய்யும் உள்ளமே அறம் தாங்கும். அறம் செய்பனாலேயே இறைவனை இதயத்தில் தாங்க முடியும். அதன் வழியாகவே தாங்குபவனைத் தாங்கும் இறையருளை ஆன்மா உணர்ந்து பாவங்கள் வினைகளிலிருந்து விடுபட்டு அவனில் உயிர் பெறும். இதுவே உயிர்ப்பு என்பதன் பொருள். உயிர்ப்புத் திருநாளைக் கொண்டாடத் தவம் முன்நிபந்தனையாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லூர்த்து அன்னையின் முதற் திருக்காட்சி நாள்
# நோயுற்றோர் நலன்பேணு உலக நாள்



1992ம் ஆண்டு மே மாதம் 13ம் நாள் பற்றிமா அன்னை திருக்காட்சி அளித்த 75வது ஆண்டு நிறைவை முன்னிட்டு அன்றைய திருத்தந்தையாக இருந்த 2வது யோண்போல் உலக நோயாளர் தினத்தைப் பிரகடனம் செய்தார். லூர்த்து அன்னை முதன்முதல் திருக்காட்சி அருளிய தினம் எனப்படும் பெப்ருவரி 11ம் நாளை 1993ம் ஆண்டு முதல் கத்தோலிக்க திருச்சபை உலக நோயாளர் தினமாகக் கடைப்பிடித்து வருகிறது. பெப்ருவரி 11 லூர்த்து மாதாவின் திருநாளாகவும் உள்ளது. லூர்த்துத் திருப்பதியில் இதுவரை உறுதி செய்யப்பட்ட 67 புதுமைகள் வழி நோயாளர்கள் குணமாகியுள்ளனர் என விஞ்ஞான மருத்துவ ஏற்புடமையுடன் கத்தோலிக்க திருச்சபை பிரகடனம் செய்துள்ள போதிலும் முற்றிலும் விஞ்ஞான ரீதியாக உறுதி செய்யப்படாத எண்ணற்ற புதுமைகள் இத்திருத்தலத்தில் நடைபெற்றுள்ளதாக உலக மக்கள் மதஇனமொழி நிற வேறுபாடுகளுக்கு அப்பால் கருதுவதால் பெப்ருவரி 11ம் நாளை உலக நோயாளர்கள் தினமாகத் திருச்சபை கடைப்பிடித்து நோயாளிகள் தங்கள் நோய்களில் இருந்து விடுபடவும் அது இறைசித்தம் இல்லையென்றால் அவர்கள் அந்த நோய்களுடன் மனநிறைவான மனிதநேயம் மனிதசமத்துவம் மனிதத்தன்மானம் என்பவற்றுடன் பாதுகாப்பான முறையில் வாழ்வதற்கான இறைவனின் துணையையும் சமுதாயத்தின் துணையையும் பெற்றுக்கொடுத்தல் இந்த உலக நோயாளர் தினத்தின் பெருநோக்கு.

''எழுந்து விசுவாசத்துடன் செல். அது உன்னைக் காக்கும்'' என்ற இயேசுபெருமான் தன்னிடம் வந்த நோயாளிகளுக்குச் சொன்ன அந்த ஆழமான அன்பான இறை வார்த்தையின் துணையுடன் ஒவ்வொரு நோயுற்றவரக்கும் நம்பிக்கையளிப்பவராக அன்புஅரவணைப்புக்காட்டுபவராக நாம் வாழ்வது என்பதே உண்மையான இறைவழிபாடு என்பதே இந்த உலக நோயாளர் தினம் எடுத்துரைக்கும் செய்தியாக உள்ளது. பின் முதலாளித்துவத்தின் தனிமைப்படுத்தப்படல் பயன்படுத்தப்பட்டபின பாழ்படுத்தப்படல் என்கிற பண்புகளால் மனிதத்துவத்தை அன்பைப் பண்பை நட்பைத் தேடுகின்ற பல இலட்சம் நோயாளிகளைக் கொண்டது இன்றைய உலகு. இந்த உலகில் இறைவன் மனிதனை என்றுமே தனியாக விடவில்லை. இறைவனின் துணை என்றும் மனிதனுக்கு உண்டு. அதனை நோயாளிகள் உணரவைப்பதும் அவர்களின் விருப்பின்படியல்ல அவனின் விருப்பின்படி இறைவனுடன் இணைந்து துன்பம் என்பது எண்ணமாயையே என்கிற உண்மையை உணர்ந்து இன்பத்திலும் துன்பத்திலும் மனிதன் இறைவனின் கையால் வழிநடத்தப்படுகிறான் என்கிற இறையியல் யதார்த்தத்தை நோயளிகள் உணர்ந்து அச்சமின்றி வாழவைப்பது ஒவ்வொரு ஆன்மநேயம் உள்ளவர்களினதும் ஒவ்வொரு மனித நேயம் உள்ளவர்களினதும் கடமை என்பதை எம் எல்லோருக்கும் எடுத்துரைப்பது இந்த உலக நோயாளர்கள் தினம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இலக்கிய மாதமொன்றின் தேவை

தேம்பாவணி காவியம் தந்த யோசப் பெஸ்கி என்ற இயற்பெயரும் வீரமாமுனிவர் என்ற சிறப்புப் பெயரும் கொண்ட இத்தாலியக் கத்தோலிக்கமதத்துறவியான வீரமாமுனிவரின் 265 வது நினைவுநாள் பெப்ருவரி 4ம்நாள் ஆகும். திருவாசகத்தையும் திருக்குறளையும் நாலடியாரையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த ஜி யூ போப் அவர்களின் நினைவுநாள் பெப்ருவரி 12 ஆகும். அத்துடன் கிறிஸ்தவ மதபோதகரான ஜி யூ போப் அவர்கள் தன்னுடைய ஆலயத்தில் சைவசித்தாந்தத்தின் உயர்வைக் குறித்துப் போதனைகள் செய்து வந்ததும் அல்லாமல் தனது கடைசிச் சொற்பொழிவையும் சைவசித்தாந்தம் குறித்தே நிகழ்த்தி இறைபதம் அடைந்தார் என்பது தமிழர் ஆன்மீகத்திற்கு கிடைத்த மதங்கடந்த அங்கீகாரமாக அமைகிறது. இரட்சணிய யாத்திரிகம் என்னும் முழுவதும் முற்றுருவுகமாக அமைந்த முதற் காவியத்தை இயற்றி இலக்கிய உலகில் நிலைபெற்றுக் கிறிஸ்தவக் கம்பன் என்று புகழப்பெற்ற கிருட்டிணபிள்ளை அவர்களின் நினைவுநாள் பெப்ருவரி 3ம் நாளாகும். உலகத் தமிழராய்ச்சி மன்றத்தை நிறுவிய தனிநாயகஅடிகள் முதலிருவர் நினைவாக பெப்ருவரி மாதத்தைத் தமிழ் இலக்கியமாதமாகக் கருதி பாடசாலைகளில் தமிழ் இலக்கியங்கள் குறித்த ஆர்வத்தையும் தமிழ் மக்களிடை தமிழிலிக்கியங்கள் குறித்த அக்கறையையும் வளர்த்து வந்தார். அந்த வழமையின் தொடர்ச்சியாகக் கிறிஸ்தவர்கள் தமிழிலக்கியத்தில் ஏற்படுத்திய ஆரம்பகாலத் தாக்கங்களை எடுத்து நோக்குவதும் நோக்காக அமைகிறது. பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் தமிழ் இலக்கியத்தை வைணவத் தமிழ் இலக்கியம் கிறிஸ்தவத் தமிழ் இலக்கியம் இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் என மதங்களின் பெயரால் வகைப்படுத்தல் திறனாய்வுக்கு உரிய சரியான முறையல்ல என்று கூறியதையும் இவ்விடத்தில் நினைவில்கொள்ளுதல் வேண்டும். இதனால் தமிழர்கள் என்ற முதன்மை அடையாளத்தைப் பேணிய நிலையில் தமிழ்க்கிறிஸ்தவர்கள் என்ற உபஅடையாளத்துடன் இவர்கள் தமிழுக்கு ஆற்றிய பங்கென்ன என்பதையே எடுத்து நோக்குவது இவ்விடத்தில் பொருத்தமுடையதாகிறது. தவத்திரு தனிநாயக அடிகளும் மாசி மாதத்தைத் தமிழ்க் கிறிஸ்தவ இலக்கிய மாதமாக அல்லாது தமிழ் இலக்கிய மாதமாகவே கொண்டாடப்பணித்தார் என்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்று. சுவாமி விவேகாநந்தரின் மதங்கடந்த இறைவன் என்னும் போக்கு இந்திய இலக்கியத்தில் மட்டுமல்ல தமிழ் இலக்கியத்திலும் மதங்கள் என்ற பிரிசுவர்களுக்குள் தமிழ் இலக்கியத்தைப் பார்க்காது மதங்கடந்த இலக்கியமாகத் தமிழ் இலக்கியத்தைப் பார்க்கும் போக்கை அக்காலத்திலேயே தொடக்கி வைத்திருந்தது. இன்று திராவிடம் என்கிற கருத்தியல் தமிழர்களைத் தவிர்ந்த மற்றைய திராவிட இனத்தவரால் போற்றப்படாத நிலையில் திராவிடர் என்ற இணைவில் தமிழர்களின் அரசியல் பொருளாதார உரிமைகள் வென்றெடுக்கப்பட இயலாத இயல்புநிலை தோன்றியுள்ளதால் தமிழ்த்தேசியத்தினை முதன்மைப்படுத்தி நாம் தமிழர் என்ற உணர்வுடன் இன்றையத் தமிழன் தமிழையும் தமிழர் தாயகங்களையும் வளப்படுத்த வேண்டிய அரசியல் யதார்த்தம் தோன்றியுள்ளது. இந்நிலையில் தமிழிலக்கிய மாதம் ஒன்று தேவையாகிறது. அது மாசியாக அமைந்தால் தவத்திருதனிநாயக அடிகளின் கனவையும் நனவாக்கும் அல்லவா?

**சூ.யோ. பற்றிமாகரன் BA, Special Diploma (Oxford), BSc, PG Diploma, MA**
**ஆசிரியர்**
**றீற்றா பற்றிமாகரன் BA, BSc, PG Diploma(Social Policy), PG Diploma (Housing)**
**இணை ஆசிரியர்**

**கவிஞர் பாலரவி**
**வெளியீட்டாசிரியர்/ பதிப்பாளர்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

AM Management Consultants Ltd T/A

# மீரா ஆணல்ட் அண்ட் கோ

Chartered Certified Accountants


- வர்த்தக ஸ்தாபனங்களை வாங்க அல்லது விற்க சகல கணக்கியல் சேவைகளுக்கு
- தனிப்பட்ட மற்றும் வர்த்தகக்கடன்களை திரும்பக்கட்ட முடியாவிடின் சட்டத்திற்குட்பட்ட மாற்று ஆலோசனைகளுக்கு இன்றே நாடுங்கள்
- தனிநபர் கணக்குகள்
- வியாபாரக் கணக்குகள்
- வரித் திட்டமிடல்
- Credit Card Problems
- Personal Bankruptcy
- வியாபார நிதி
- வரிப்பணம் மீளப்பெறல்



Telephone 020 8882 2333 Fax 020 8882 0328

45 Chandos Avenue, Southgate, London N14 7ES


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Printed at JR Print. T: 0208 503 6643